
யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை

# உதய நிலா

## பவள விழா மலர் 2003-2005



உ
சிவமயம்

யா. உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை

செந்தமி ழோடாங்கிலமுஞ் செழுமைமிகு கலைகளையும்
வந்தமரும் மாணவர்கள் வாஞ்சையுடன் - இந்த
சந்திரோ தய வித்யா சாலைதனிற் கற்றுயரும்
தந்திரத்தைத் தந்திடம்மா நீ.

# உதய நிலா

## 2003 - 2005



## *பவள விழா மலர்*

நண்ணிடும் எம் சிறார்க்கு
எண்ணுடன் எழுத்தறிவூட்டி
எக்காலமும் பொருந்தும்
வண்ணமாய் வாழ்திறன்கள்
மண்ணினில் பெற்றுயர்ந்து
கண்ணியமாக வாழும்
பண்பினைப் புகட்டுவோம் நாம்.

SWAP மகுடவாசகம்

வளங்கள் பல அல்ல. உளமே எமது பலம்.



# அம்மா எம் தெய்வம்

முன்னம் முன்னம் நாங்கள் மண்ணில்
காணும் தெய்வம் அம்மா
தன்னைத் தியாகஞ் செய்து எம்மை
பேணுந் தெய்வம் அம்மா (முன்னம்...)

உதிரந்தன்னைப் பாலதாக்கி
ஊட்டி வளர்ப்பாள் அம்மா
சதிரம் நொந்தால் தாங்க மாட்டாள்
தவித்திடுவாள் அம்மா (முன்னம்...)

பஞ்சம் வந்த போதுங் கொஞ்ச
கஞ்சி எமக்குத் தந்து
பச்சைத் தண்ணி தான் பருகி
பாதுகாப்பாள் அம்மா (முன்னம்...)

உந்தன் பிள்ளை உதவாக் கரை
என்று எவருஞ் சொன்னால்
எந்தன் மகனா இருக்காதேயது
என்று சொல்வாள் அம்மா (முன்னம்...)

ஊனம் வந்து உலகந் தள்ளி
ஒதுக்கி வைத்தபோதும்
வேணும் எந்தன் பிள்ளை என்று
விரும்பி வளர்ப்பாள் அம்மா (முன்னம்...)

முடிநரைத்து தடிபிடித்து
தளர்ந்து வீழும் போதும்
அவளடிதொழுது அரவணைத்து
அன்பாய்ப் பேணுவோம் நாம் (முன்னம்...)

*கவிமணி*
*க. ஆனந்தராசா.*

# பாடசாலைக் கீதம்

வாழ்க சந்திரோதயம் வாழ்க சந்திரோதயம்
வானள வோங்கியே வாழ்க
ஏழிசை போல தமிழொடு சிவநெறி
என்றும் இசைந் தோங்கி வாழ்க
வாழ்க! வாழ்க! வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!
வாழ்க! சந்திரோதயம் வாழ்க!

ஒதுவ தொழியேல் எனும் பெரு வாசகம்
உள்ளத்தின் கருப் பொருளாக
போதிய அறிவைப் புவியினில் நாம் பெற்று
ஓதிய படியிங் குழைப்போம்
வாழ்க! வாழ்க! வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!
வாழ்க! சந்திரோதயம் வாழ்க!

கண்ணியம் கட்டுப்பாடு கடமைக ளாகி
காலமும் பேணிப் புது முறையில்
பன்னிடுங் கல்வி பயனெலாம் நாம் பெற
பரிந்தளிப்பாய் கலை மகளே
வாழ்க! வாழ்க! வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!
வாழ்க! சந்திரோதயம் வாழ்க!

ஆயிரத்து தொளாயிரத்து இருபத்து
எட்டாம் ஆண்டு முதல்
பேரொடு புகழும் பெரு மதிப்புடனும்
சீர்பெற நின்று யர்ந்தனளே
வாழ்க! வாழ்க! வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!
வாழ்க! சந்திரோதயம் வாழ்க!

# நிலாவின் உள்ளே


- பாடசாலைக்கீதம்
- ஆசிச் செய்திகள்
- வாழ்த்துரைகள்

01. எங்கள் பாடசாலை 1 - 4
02. புதுமை புகுத்திய நக்கீரர் 6 - 9
03. ஏனிந்த வெளிநாட்டு மோகம் 11 - 14
04. எங்கள் குருநாதர்களை ஏற்றி வழிபடுவோம் 15
05. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்களிப்பு 16 - 17
06. சிந்தனை முத்துக்கள் 17
07. சந்திரோதயத் தாயாள் சஞ்சலம் இன்றி வாழி 19
08. கருவறை தொடக்கம் கல்லறை வரை 20 - 21
09. எம் மாணவர்களும் ஆங்கில மொழியும் 22 - 23
10. யாரொடு நோவது யார்க்கெடுத்துரைப்பது 24
11. சர்வதேச குறியீடுகள் 26
12. பொது அறிவு 26
13. எமது பாடசாலை அதிபர் 27
14. திருஞானசம்பந்தர் 27
15. அதிபர் சொன்ன அறிவுக் கதை 28 - 29
16. ஆனையும் தின்பான் பூனையும் தின்பான் 29
17. ஊனம் ஈனமல்ல 31
18. பரிசளிப்புவிழா தந்த பாடம் 32
19. கணிதத்திற்குதவியாக 33
20. நானெனும் அகந்தை வேண்டாம் 34
21. அன்னைத் தெய்வம் 35
22. பிடி அரிசி சேர்த்து மிடி களைவோம் வாரீர் 35
23. இலக்கியமும் வாழ்க்கையும் 37
24. My Teddy Bear 38
25. My Self 38
26. The Fruit I Like Best 38
27. Animal's Qualities 39
28. My Pet 39
29. Health Tips 40
30. My English Teacher 40 - 41
31. My Collective Words and Phrases 41 - 42
32. Our School 43
33. Our English Room 43 - 44
34. Name of the city 44
35. தேசியமட்டத்திற்குத் தெரிவு 45
36. பரிசுப் பட்டியலும் சாதனைகளும் 46 - 51

- உதயநிலாவின் உள்ளத்து நன்றிகள் 52



பவளவிழா மலருக்கு

நல்லை ஆதீனக் குரு முதல்வரின்

# அருளாசியுரை

யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம் இவ்வாண்டு பவள விழா காண்பதையிட்டும் அதனையொட்டி **'உதயநிலா'** என்னும் மலரினை வெளியிடுவதையிட்டும் மகிழ்வடைகின்றோம். 75ஆண்டுகளாக உரும்பிராய் பிரதேச கல்வி வளர்ச்சிக்கு தன்னாலான பங்கினை ஆற்றியிருக்கின்ற சந்திரோதய வித்தியாலயம் இக்காலப் பகுதியில் பல கல்வியியலாளர்களையும், அறிஞர்களையும் உருவாக்கியுள்ளமை போற்றுதற்குரியது.

'ஓதுவதொழியேல்' என்ற ஔவை மொழியை மகுட வாக்கியமாக்கிக் **கல்விப் பணியுடன் சமயப்பணியும், தமிழ் பணியும் சேர்த்து செம்மையாக சேவையாற்றிவருவது இப்பாடசாலையின் தனிச் சிறப்பாகும்.** அழிவில்லாத செல்வமாகிய கல்வியை வழங்குவது, ஆலயங்கள் அமைப்பதைக்காட்டிலும் அன்னசத்திரங்கள் நிறுவுவதைக் காட்டிலும் சிறந்ததென்பர். எனவே இப்பணி தொடர்ந்து நடைபெறவும் இக் கல்லூரியானது பல வளர்ச்சிகளைக் கண்டு தடைகளை தகர்த்து பல நூற்றாண்டு காலம் நிலைத்திருக்க வாழ்த்துகின்றோம். இக் கல்லூரியில் பணியாற்றுகின்ற அதிபர், பிரிவுத் தலைவர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பானாக. வெளிவரும் **'உதயநிலா'** நிறை மலராக பூரணைபோல எல்லோர்க்கும் பயன்தரும் வண்ணம் வெளிவரவும், இம் மலருக்காக தம்மை அர்ப்பணித்த இதழாசிரியர் மற்றும் அனைவருக்கும் இறைவனது ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**'என்றும் வேண்டும் இன்ப அன்பு'**

*இரண்டாவது குருமகா சந்நிதானம்*
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக*
*ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்*
*ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்.*



பிரம்மஸ்ரீ. க. மு. சோமசுந்தர குருக்களின்

## ஆசியுரை

"செல்வத்துட் செருஞ் செல்வம் கல்விச் செல்வம்" என்பர் ஆன்றோர். இச் செல்வத்தை எமக்கு அள்ளித் தருபவை கல்விச்சாலைகள் ஆகும். நம் நாட்டில் பல வித்தியாலயங்கள் அரும்பெரும் கல்விமான்களை உருவாக்கியுள்ளன. இவ் வகையில் பார்க்குமிடத்து சைவமும், தமிழும் தழைத்தோங்கும் உரும்பிராய் ஊரில் அமைந்துள்ள சந்திரோதய வித்தியாலயமும் முதன்மை பெறுகின்றது. ஆரம்ப பாடசாலையாக இயங்கி வந்த இந்த வித்தியாலயம் உயர் வகுப்புகளுடன் உயர்ந்துள்ளது. நான் இவ் ஊருக்கு வந்த இந்த இருபது வருடங்களுக்குள் இதன் முன்னேற்றம் என்னைப் பிரமிக்கச் செய்கிறது. இப்பொழுது அதிபராக இருக்கின்ற **திரு. க. ஆனந்தராசா அவர்கள் மாணவர்களிடையே சமயப்பற்றை வளர்க்கும் நோக்குடன் ஆண்டுதோறும் நவராத்திரி விழாவை 10 நாட்களும் விசேட பூஜையுடன் நடாத்திவருவது எமக்குத் தெரிந்ததே.** சக ஆசிரியர்களும் சேர்ந்து ஒத்துழைத்து வருகின்றனர்.

இப்பொழுது விளையாட்டுப்போட்டி, பரிசளிப்பு விழாக்களை நடாத்தி மாணவர்களின் திறமைகள் வளர ஊக்குவிக்கின்றனர். இன்று இவ் வித்தியாலயமானது பல புதிய கட்டடங்களைக் கொண்டுள்ளது. காலப்போக்கில் சகல துறைகளிலும் இப் பாடசாலை மென்மேலும் வளர்ந்து ஓங்க வேண்டும். பவள விழாக்காணும் இவ் வித்தியாலயம் விளையாட்டுத் துறையில் மட்டுமல்லாது கல்வித்துறை, கவின்கலைத் துறைகளிலும் கோட்டமட்டத்தில் மட்டுமல்லாமல் அகில இலங்கை ரீதியிலும் சிறந்து விளங்க வேண்டும் என எல்லாம்வல்ல பர்வதவர்த்தினி அம்பிகையின் பாதாரவிந்தங்களை வழுத்தி ஆசிரிய சமூகத்திற்கும், மாணவர் சமூகத்திற்கும் எனது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

*வேத சிவாகம ஞானபாநு,*
*பிரம்மஸ்ரீ. க. மு. சோமசுந்தரக் குருக்கள்,*
*பர்வதவர்த்தினி அம்மன் கோவில்,*
*உரும்பிராய்.*

வலயக்கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி

வாழ்க!! வாழ்க!!

'ஓதுவதொழியேல்' என்னும் ஔவையாரின் பொன்மொழியை மகுடவாசகமாகக் கொண்ட யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம் கடந்த எழுபத்தைந்து வருடங்களுக்கு மேலாகச் சைவமும் தமிழும் அழிவுறாது இருப்பதற்காகக் கல்வித் தொண்டாற்றி வரும் ஒரு கலாலயமாகும். அக்காலத்தில் மலாயா நாட்டில் உழைத்தவர்களால் உரும்பிராய்ப் பகுதியில் கல்வித் தாபனங்கள் உருவாக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வந்துள்ளன. இப் பாடசாலையும் அவ்வாறு ஆரம்பிக்கப்பட்டு பல ஏழை மாணவர்களின் கல்விக் கண்களைத் திறந்து அவர்களை மனிதராக்கியுள்ளது. அறுநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்ற ஒரு பாடசாலை காலத்தின் தேய்வுகளினால் மாணவர் எண்ணிக்கையும் குன்றியது. எவ்விடர் ஏற்படினும் கல்வித் தாபனம் அழிக்கப்பட்டாலும் கல்வித் தொண்டாற்றியே தீருவோம் என்ற எம்மவர்களின் அயராத முயற்சியினால் அனர்த்தங்களால் அழிந்த பாடசாலை மீளப் புதுப்பிக்கப்பட்டு இப்பகுதி மாணவர்களுக்கு கல்வித் தொண்டாற்றி வருகின்றது. குறிப்பாக வலிகாமம் வடக்கிலிருந்து அதியுயர் பாதுகாப்புவலயத்திலிருந்து இடம்பெயர்ந்த பிள்ளைகளுக்குக் **கல்வி ஊட்டிவரும் ஒரு ஆலயமாக** இப்பாடசாலை விளங்குகின்றது. புதிய கல்விப் பரிமாணங்களைத் தன்னகத்தே கொண்ட இப்பாடசாலை மாணவர்கள் பல தேர்ச்சிகளையும் பெற்று உடல், உள சமூக வளர்ச்சியடைய பன்னெடுங்காலம் தொண்டாற்ற வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். இப்பாடசாலையைச் சூழவுள்ள அனைத்து மாணவர்களும் இப்பாடசாலையிற் சேர்ந்து கல்வி கற்க வேண்டும். இடைவிலகல் இல்லாது எல்லா மாணவர்களும் தொடர்ந்து கற்க வேண்டும் என்னும் எனது வேண்டுகோளை இவ்வாழ்த்துரை வழங்குவதனூடாக பெற்றோர்களைப் பணிவுடன் வேண்டுகின்றேன்.

**வளர்க யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்**

*வே. தி. செல்வரத்தினம்,*
*வலயக்கல்விப் பணிப்பாளர்,*
*வலயக்கல்வி அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*



பவளவிழாக் கால (2003)
கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி

சிவக்கும் முகத்துடன் உதிக்கும் சூரியன், உரும்பிராய்ச் செம்மண் நிலத்தில் தவழும் அழகில் முளைத்த உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை எழுபத்தைந்து வருடங்களைப் பூர்த்தி செய்து பவள விழாவில் சங்கமிக்கும் இற்றை நாளில் மகிழ்வோடு வாழ்த்துகின்றேன்.

நீண்ட ஆண்டுகள் தேயாத நிலவாகி மண்ணிற்குக் கல்வி வளம் சேர்த்த இப்பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள் தவக்கோலங்களை ஒழுக்க விழுமியங்களை இந்நேரம் மீட்டுப் பார்ப்போம். மழைக்குப் பயந்து மண்டபத்துக்குள் ஒழிக்காமல் முளைக்கும் பயிராகி நிமிர்ந்த மாணவர்களின் வாழ்வியல் உயர்ச்சியைப் பாராட்டுவோம்.

பாடசாலையின் வருங்காலத் தேடல்கள் அறிவியல், சிகரங்களைத் தொட வேண்டும். அதிபரின் ஆளுமையும், ஆசிரியர்களின் வாண்மையும், பெற்றோர்களுடன் சமநிலைப்பட்டு மாணவர்களைப் பூமிப்பந்தில் பூக்க வைக்க வேண்டும், உயர்த்த வேண்டும், கல்வியில் வெற்றிகளைக் குவிக்க வேண்டும்.

வள்ளுவன் மொழிகளை நெஞ்சுக்குள் நிறுத்தி ஒழுக்கம் நிறைந்த மனுக்குலத்தை **'உதயநிலா'** ஆக்க வேண்டும். கிராமத்தின் இதயமான பாடசாலை நகரத்தை நோக்கி நகராமல் நவீனத்துவ கல்வி நெறியை நோக்கி நகர வாழ்த்துக்கள். *** கவிஞரான அதிபரின் 'உதயநிலா' முயற்சி எதிர்காலத்தில் நூலக வாரத்தில் மாணவர்கள் ஆக்கங்களுடன் புத்தகமாகப் பிரசுரிக்கப்பட்டால் ஒரு தேசத்தின் ஆவணக் காப்பகத்தில் சேர்க்கப்படும்.** மொத்தத்தில் பவள விழாவினால் பளிச்சிடும் சந்திரோதயா சரித்திரம் படைக்க வாழ்த்துக்கள்.

*ப. விக்னேஸ்வரன்*
*(வலயக் கல்விப் பணிப்பாளர்)*

*** தற்பொழுது அம்பாளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.**



பவள விழாக்கால

முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளரின்

(முதல் மொழி)

# வாழ்த்துச் செய்தி

'உதய நிலா பொழிகிறது, இதயம் வரை நனைகிறது'

இவ் வித்தியாலயம் உருவாகி 75 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. பெயருக்கேற்ப என்றும் மாறாத சிறப்புடன் ஒளிபாய்ச்சி எத்தனையோ மாணவச் செல்வங்களை உருவாக்கிய பெருமையால் இன்று புதுப்பொலிவுடன் மிளிருகிறது. இவ் வேளையிலே இப்பாடசாலையின் விருத்திக்கு அரும்பணியாற்றிய ஆசிரியமணிகளையும், முதல்வர்களையும் இப்பாடசாலைச் சமூகமும், கல்வியாளர்களும் நன்றியோடு நினைத்து மகிழ்கின்றனர். அந்த வரிசையிலேதான் இன்று இவ் வித்தியாலயத்தில் அர்ப்பணிப்போடு உழைத்துவரும் ஆசிரியர்களினதும், **அதிபர் கவிஞர் திரு. க. ஆனந்தராசா அவர்களினதும் அரிய சேவைகளையும்** கணித்துப் பார்க்கிறோம்.

சைவச் சிறார்களின் கல்விக்குக் கலங்கரை விளக்கமாகும் இப்பாடசாலை, அண்மைக் காலத்திலே அளவு ரீதியானதும், பண்பு ரீதியானதுமான வளர்ச்சியில் கருத்துடையதாய் உயர்வது மிக மகிழ்ச்சிக்குரியதே. தம் மாணவ வளம், ஆசிரிய வளத்துக்கேற்ப **கோட்ட, வலய மட்டங்களில் மாணவர்களை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதிலும், தமிழ்மொழி, கலைத்திறன், விளையாட்டு, சமய ஆன்மீக துறைகளில் பங்களிப்புச் செய்வதிலும் புதிய எழுச்சி உருவாக்கப்பட்டிருக்கிறது.** புதிய கட்டிடத்தொகுதி உருவாக்கம், மைதானப் பயன்பாடுகள், வேலை பகிர்ந்தளிப்பு, கணிப்பீட்டு முறைமையில் புதிய உத்வேகம் என்பன இவற்றில் நோக்கக்கூடிய சில அம்சங்கள். இந்த வகையிலே தான் இந்த அதிபரின் வரவுக்கு பிறகு தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் **'உதயநிலா'** சஞ்சிகை உருவாக்கமும் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் படைப்பான 'தளிர் வாடாமலர்' நூல்களும்.

பாடசாலை மாணவச் செல்வங்களில் மொழியாற்றலையும், கல்வியடைவையும், ஆக்கத் திறனையும் தம்மளவில் வெளிக்காட்டச் சந்தர்ப்பமளித்துவந்த சஞ்சிகை, இன்று ஒரு சிறப்புச் சஞ்சிகையாக வெளிவருவது தேவையும், பொருத்தமுமுடைய நிகழ்ச்சியுமாகும். பாடசாலைப் பெயரையே உள்ளீடாக்கி **'உதயநிலா'** (சந்திர + உதயம்) என்ற பெயரில் பல நல்ல அம்சங்களையும், பாடசாலை வளர்ச்சிப் பாதையின் வரலாறுகளையும் உள்ளடக்கி வருகிறது. இவ்வாறான ஆவணப்படுத்தல்கள் பாடசாலைகளுக்கு மிக அவசியம். இக் கைங்கரியத்தின் நிறைவுக்குக் காரணமாகவும், பக்க பலமாகவும் இருந்த அனைவரையும் இந்த விழா வேளையிலே மனமார வாழ்த்துகின்றேன். **'உதயநிலா'** தொடர்ந்து ஒளிபரப்பி விளங்க என் பாராட்டுக்கள்.

*ஆசிரியமணி* M.S *ஸ்ரீதயாளன்* J.P

*உ.க.ப (தமிழ்)*

முதல் உதயநிலா உதித்தவேளை (2000)

வலயக் கல்விப் பணிப்பாளரின்

# இதயத்து ஆசிகள்

யா/உரும்பிராய் சந்திரோய வித்தியாலய மாணவர்களின் ஆக்கங்களை தாங்கிய **'உதயநிலா'** எனும் சஞ்சிகை வெளிவருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாணவர்களது ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கு இத்தகைய சஞ்சிகை வெளியீடுகள் மிகவும் உறுதுணையாக அமைகின்றன. இவர்களது கையெழுத்துச் சஞ்சிகைகளான **"தளிர்"**, **"வாடாமலர்"** என்பன மாவட்ட மட்டத்தில் தெரிவாகி மாகாண மட்டப்போட்டிகளுக்குச் சென்றமை பாராட்டப்பட வேண்டியது.

இவர்களது முயற்சி மேன்மேலும் வளரவும், அறிவை அவாவுவோருக்கு இனிய நிலவைப் பொழியவும் இவர்களது ஆக்கத்திறனுக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களையும், ஆக்கங்களை ஆக்கிய மாணவர்களையும் வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

*திருமதி. செ. மகாலிங்கம்*
*தற்பொழுது மாகாணக் கல்விப் பணிப்பாளர்,*
*யாழ்ப்பாணம்.*



கோப்பாய் கோட்ட

உதவிக்கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துரை

யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம் வருடாவருடம் வெளியிட்டு வைக்கும் **'உதயநிலா'** சஞ்சிகையானது புதுமெருகுடன் பவளவிழா மலராக இவ்வருடம் வெளிவருகின்றது. இச் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர்களது பல்வேறு ஆக்கங்களையும், அறிஞர்களின் பல்வேறு கருத்தாழம் மிக்க கட்டுரைகளையும் தாங்கிவரும் இச் சஞ்சிகை பாடசாலையின் கற்றல் கற்பித்தல் வளர்ச்சிக்கு ஒரு வெளியீடாக அமைகின்றது. மாணவர்களது கற்றல் திறனை வளர்ப்பதோடு அறிவுள்ள ஒரு சமுதாயத்தைக் கட்டி வளர்க்கும் பாரிய பொறுப்பு ஏற்றிருக்கும் இக் கல்லூரிச் சமுகம் மேலும் பல்லாண்டு காலம் பல சிறப்புக்களுடன் தழைத்து வளர என் நல்லாசிகள்.

*திரு. இ. சிவஞானசுந்தரம் (உ.க.ப)*



இணைந்த அதிபரின்

# இதயத்து ஆசிகள்

மாணவர்களின் சிந்தனை ஆற்றலைத் தூண்டி வளர்ச்சியடைய களமாக இருப்பவை சஞ்சிகைகள் இவ்வகையில் இவ் **'உதயநிலா'** வில் பிஞ்சுகளின் உள்ளக்கிடக்கைகள் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

இப்போது உதித்திருக்கும் இந்த **'உதயநிலா'** எல்லோரது வீட்டிலும் உதித்து இதன் பிரகாசத்தைப் பரப்ப வேண்டும். **பாடசாலையும், ஆசிரியர்களும், மாணவர்களும் தனது குடும்பம் எனக் கருமமாற்றுபவர் இப்பாடசாலை அதிபர்.** பல்சுவை நிரம்பிய இச்சஞ்சிகை உதிப்பதற்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்த அதிபர் பாராட்டப்பட வேண்டியவர். 'அதிபர் எவ்வழி அவ்வழியே நாமும்' என பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் ஆசான்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே. எம்பிஞ்சுகளின் **'உதயநிலா'** ஒவ்வொரு வருடமும் பூரண நிலா போன்று உதிக்க எனது இதய ஆசிகள்.

*திருமதி. ஆ. இராஜரட்ணம்*
*அதிபர்*
*கிளி / சோரன்பற்று சி. சி. த. க பாடசாலை*



பாடசாலை அபிவிருத்திச் சங்க

செயலாளரின்

# ஆசிச்செய்தி

எமது கிராமத்திற்குச் சிறந்த கல்விப்பணி செய்து இன்று பவளவிழாக் காணும் எம் பள்ளியின் அதன் பவள விழாக் காலத்தில் அபிவிருத்திச் சங்கத்திற்கு செயலாளராக இருந்து பணியாற்றும் வாய்ப்பை எண்ணி மகிழ்கிறேன். பல்வேறு வகையான கல்வியாளர்களைத் தந்த பள்ளியின் பெருமையினை நினைவுகூர்கின்றேன். இக் காலப் பகுதியில் பவளவிழா நினைவாக அமையவல்ல '110 x 25' மாடித்தளக் கட்டிடம் G.T.Z நிறுவனத்தினரின் அளப்பரிய உதவியினால் அமைக்கப்பட்டது. பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டியது.

அதிபரினால் மேற்கொள்ளப்படும் அண்மைக்கால வளர்ச்சியை மேலும் விரிவுபடுத்த பெற்றோர்கள், பழைய மாணவர்களின் பங்களிப்பை எதிர்பார்த்து என் இதயத்து ஆசிகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

*என்றும் சேவையில்*
*இ. விமலபாலச்சந்திரன்*



உதவிக் கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துச்செய்தி

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம் வருடாவருடம் வெளியிட்டு வைக்கும் **'உதயநிலா'** சஞ்சிகை இவ் வருடம் சிறப்பாக வெளிவருகின்றமை மகிழ்ச்சியைத் தருகின்றது. இது மொழித்திறன் வளர்ச்சியின் குறிகாட்டியாகும். சஞ்சிகை ஆக்கத்தில் முன்னணியில் நிற்கும் பாடசாலைகளில் இப் பாடசாலையும் குறிப்பிடத்தக்கதாகும். தளிர், வாடாமலர் ஆகிய சஞ்சிகைகள் மாணவர்களால் தயாரிக்கப்பட்டு மாகாணமட்டப் போட்டிகளுக்கு தெரிவாகியமை பாராட்டுதற்குரியதாகும். இவ்வாறான தேடல்கள், ஆக்கங்கள், அறிவியல் சிகரங்களைத் தொட உதவும் என்று நம்புகின்றேன். இவ்வாறான ஆக்கங்கள் மேலும் பெருகி கல்லூரி அன்னையின் மடியில் தவழவேண்டுமென ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.

*மீ. அருள்நேசன்*
*உதவிக்கல்விப் பணிப்பாளர்,*
*தமிழ்த்துறை, யாழ்ப்பாணக் கல்வி வலயம்.*

கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர்

செல்வி. திலகா பெரியதம்பி அவர்களின்

# ஆசிச் செய்தி

**'உதயநிலா'** பவளவிழா சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். தரம் 1 தொடக்கம் 9 வரை உள்ள இப்பாடசாலை மாணவர்களின் எழுத்தாற்றலை வெளிக்கொணர்வதற்கு பல முயற்சிகள் மேற்கொண்டுள்ளதென்பது சிறப்புடைய செயலாகும். மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியில் இப் பாடசாலையின் சஞ்சிகை தெரிவு செய்யப்பட்டமை போற்றுதற்குரியதாகும். மாணவர்களின் மொழியாற்றலை விருத்தி செய்வதில் **ஆசிரியர்களும், அதிபரும் காட்டும் ஆர்வம் பாராட்டுக்குரியதாகும்.**

மேன்மேலும் இத்துறையில் மாணவர்களை ஊக்குவித்து, சிறந்த படைப்பாற்றல் உள்ளவர்களை இப்பாடசாலை உருவாக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

*தலைவர்*
*கல்வி மேம்பாட்டுப் பேரவை, யாழ். மாவட்டம்.*

ஆரம்பக்கல்வி உதவிப் பணிப்பாளரின்

# வாழ்த்துரை

1928ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இற்றைவரை எழுபத்தேழு ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றி கிராமச் சிறார்களின் கல்விக்கு கலங்கரை விளக்காகத் திகழும் யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தின் பவளவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

**போதிய பௌதீக வளம் இல்லாத போதிலும் மனவளம் நிறைந்த அதிபரினதும், ஆசிரியர்களினதும்,** இப் பகுதி மாணவர்களின் கற்றல், ஒழுக்கம், ஆளுமை விருத்தி, விழுமிய மேம்பாடு என்பவற்றிற்கான அர்ப்பணிப்பு நிறைந்த சேவையை நான் உளமாரப் பாராட்டுகின்றேன்.

1996இல் இடப்பெயர்வின் போது இழந்த கல்விச் சூழலை மீண்டும் இயல்பு நிலைக்கு மீட்டபின், தொடர்ந்தும் முன்னரிலும் பார்க்க உன்னத நிலை நோக்கி மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் தொடர அனைவரும் ஆதரவு நல்க வேண்டும்.

குறிப்பாக **சிறந்த ஆரம்பக்கல்வியை வழங்கும் இக் கல்விச்சாலை** மேலும் பல்லாண்டுகள் பணிசெய்ய எல்லாம்வல்ல **கற்பக விநாயகர்** அருள்புரிய வேண்டும் என வேண்டுவதுடன் எனது நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*நா. சுவாமிநாதன்,*
*உதவிக் கல்விப் பணிப்பாளர்,*
*(ஆரம்பக் கல்வி)*



முன்னாள் பகுதித் தலைவரின்

# பாராட்டுக்கள்

கற்றல் ஒரு மகிழ்ச்சிகரமான செயல், கற்பித்தல் பயன் விளைவுள்ள ஒரு பணி. இதற்குச் சகல வளங்களையும் உடைய அறிவு, திறன், செயலூக்கம் உள்ள ஆசிரியர்களையும், மாணவர்களையும் கொண்டதாக ஒரு அறிவாலயம் அமைந்துவிட்டால் அதன் பெருமைக்கும் நிகரேது!

மேற்குறித்த ஆசிரிய வள ஆளணி குறைவுற்ற நிலையிலும்கூட எம் மாணவச் சிறார்கள் பரமப் பிரயத்தனப்பட்டு பல்சுவை அம்சங்களையும் கொண்ட படைப்பாக **'உதயநிலா'** மாணவர் சஞ்சிகை 2ம் மலரை 2001இல் முகிழ்ந்துள்ளனர். ஆசிரிய ஆளணி முதல் சகல தரப்பிலும் இடைஞ்சலை ஏற்படுத்திய பொழுதிலும், **அடாது மழை பெய்தாலும் விடாது காரியம் நடாத்தும் எம் அதிபர், 'எல்லாம் நன்மைக்கே'** என்று இருக்கின்ற வளத்தில் இன்பம் காண ஆக்கமும், ஊக்கமுமளித்து **'உதயநிலா'** வெளிவரச் செய்தமைக்கு **அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கு** எமது உளம் கனிந்த பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகுக.

*திருமதி. ப. கதிரவேலு,*
*பகுதித் தலைவர்*
*(இ.ஆ.சே.த I)*



மூத்த மாணவனின்

# முத்தான வார்த்தைகள்

## நிலா நிலா ஓடி வா!

சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலையில் படிக்க வேண்டும் என இலங்கையின் முதன்முதலாக 1848இல் வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையை நாவலர் பெருமான் நிறுவினார். முதன்முதல் தோற்றிய சைவப் பாடசாலை இதுவாகும். இந்நோக்கை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அதிகாரசபை, சைவ வித்தியாவிருத்திச் சங்கம் என்பன சைவப் பாடசாலைகளை அமைத்தன. இதில் பெருவெற்றியுங்கண்டனர். இந்த வகையில் அமைக்கப்பட்டதே யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை.

வளர்ச்சி கண்ட இப் பள்ளியின் பங்களிப்பிற்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் பெரும் பங்காற்றினார்கள். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய கரவெட்டியூர் சேதர் கணபதிப்பிள்ளை முதல், உதவியாசிரியராகக் நீண்டகாலம் கடமையாற்றிய நீர்வைப் பண்டிதர் நீ. சி. முருகேசு முதலானோர் விசேடமாக குறிப்பிடத்தக்கவர்கள். இதன் பழைய மாணவர்கள் வெளிநாடுகளிலும், எம் நாட்டின் நாலாபுறங்களிலும் உயர்ந்த உத்தியோகத்திலிருந்து பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்துள்ளார்கள்.

புகழ்பூத்த உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை பவள விழாக்காணும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது. பெயருக்கு ஏற்ப **'உதயநிலா'**வும் அமைந்துள்ளது. இதனை நினைக்க "நிலா நிலா ஓடி வா, நில்லாமல் ஓடி வா, மலை மீது ஏறிவா, மல்லிகைப் பூ கொண்டு வா" என்ற பாட்டிமாரின் பாட்டே நினைவுக்கு வருகிறது. பழைய சரித்திரத்தையும் இக்கால வளர்ச்சியையும் தாங்கி வரும் இவ் **'உதயநிலா'** எல்லோர் மனதிலும் பசுமையாக நிலைத்து நிற்கும் என்பது திண்ணம்.

இவ் வித்தியாசாலையின் வளர்ச்சிக்கும் **'உதயநிலா'** வின் எழுச்சிக்கும் உழைத்துவரும் **அதிபர் கவிஞர். க. ஆனந்தராசா அவர்களும், ஆசிரியர்களும்** என்றென்றும் பாராட்டுக்குரியவர்கள்.

"முயற்சி திருவினையாக்கும்"

*ஆசிரியமணி*

*அ. பஞ்சாட்சரம்*



# அதிபரின் அகத்திலிருந்து

**"அன்னையைத் தொழு அனைத்தும் தருவாள்"**

பவளவிழாத் தாண்டி நூற்றாண்டு விழாவை நோக்கி நடைபயிலும் இவ்வன்னைக்குப் பணி செய்யும் பதின்னான்காவது அதிபராக...... 06.05.1999இல் காலடி எடுத்து வைத்த நான் இக் காலத்திலும் இப்படியா?...... எனச் சிந்திக்க வைக்கும் வறுமை, அறிவீனம், ஆதரவற்ற தன்மை என்பவற்றைத் தாங்கிவரும் என் அன்புச் செல்வங்களினால் ஏற்பட்ட, அன்றாடம் ஏற்படும் பல துன்ப துயரங்களைத் தாங்கி சுமை மிகுந்த நெஞ்சோடு இங்கு காணப்படும் ஓர் ஆக்கத்திற்கு அமைவாக ஆவணப்படுத்தப்பட்ட இம் மலரூடாக உங்களிடம் சிலவற்றைப் பகிர்கின்றேன். இது எந்த வரையறைக்கும் உட்பட்ட மலரன்று. இத் தொகுப்பு மலர் நிறைவானதுமன்று. காலத்தால் கரைந்தவற்றையும், தேடலில் தவறியவற்றையும் தவிர்த்து முடிந்தளவிற்கு ஆவணப்படுத்தி உள்ளோம். எனது பல இலக்கிய அன்பர்களுக்கு களங்கொடுக்க அவா. ஆனால் வளமற்று வாடுகின்றேன். மன்னிப்பார்களாக. ஆக்கங்கள் தந்த பெருந்தகைகளுக்கு ஆராமைமிகு நன்றிகள்.

உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க இலண்டன் கிளையினரின் பணப் பங்களிப்பினாலேயே காலங்கடந்த நிலையிலேனும் ஒரு தொகுப்பு மலராக மலர்கிறது. அவர்களுக்கும் எனது இதய நன்றிகள்.

**என் காலத்தில் என்னால் நிறைவேற்றப்பட்ட இந்நூலின் கண்ணுள்ள சகல பணிகளுக்கும் தோன்றாத் துணையாகவும், உற்ற துணையாகவும் நின்ற அமைச்சு, அதிகாரிகள் தொடக்கம், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர், அரச சார்பற்ற நிறுவனத்தினர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், என்னருமை ஆசிரியர்கள், மாணவச் செல்வங்களின் பெற்றோர்கள் அனைவருக்கும் எனது இதயத்து நன்றிகள்!**

வந்த பிள்ளைகளையும் தந்த வளங்களையும் கொண்டு இந்தளவுக்கேனும் முந்த வைத்துள்ளோம். முடிந்தளவுக்கு முயல்வோம் என்று கூறி என்றும் என் செல்வங்களின் சேவையில் மகிழும்.

*உங்கள் அதிபர்*



# உப அதிபரின் உள்ளத்திலிருந்து

இப் பாடசாலையில் தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்ற நான் இதன் வளர்ச்சியின் படி நிலையைக் கண்டு பூரிப்படைகின்றேன். **பல்வேறு வகையான சோதனைகள் எமக்கு ஏற்பட்ட பொழுதிலும் மனம் தளராத அதிபரின் ஆளுமைமிக்க முன்னெடுப்பான வேலைத் திட்டங்களாலும் ஆசிரியப் பெருந்தகைகளின் ஒத்துழைப்பாலும் இன்று இப்பாடசாலை மிளிர்ந்து நிற்கிறது.** அதற்கு மேலும் அணிசேர்க்கும் விதத்தில் இம் மலர் வெளியீடு அமைவது சாலச் சிறந்தது.

புதிய கல்விச் சீர்திருத்தத்தில் மகிழ்ச்சிகரமான கற்றல் என்பதற்கமையவும், மாணவர்களின் **இறை ஆன்மீக ஈடுபாட்டிலிருந்து இன்றைய நவீன விஞ்ஞான கல்விச் சிந்தனைச் செயற்பாடுகள் வரை** யாவற்றிலும், பாடசாலைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு மாணவர்கள் வழிகாட்டப்படுகின்றனர். அத்தகைய முயற்சிக்கு இம்மலர் மேலும் உந்துசக்தியாக அமையும் என்பது எனது பெருநம்பிக்கை.

இம் மலரானது வருடாவருடம் வெளிவர வேண்டும் என்பது எனது அவா. இது ஆரம்ப வகுப்பு மாணவர்களின் கல்வி வளத்திற்கு ஓர் முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் அமைவதோடு பாடசாலையின் வளர்ச்சிக்கும் தலைமைத்துவ ஆற்றலுக்கும் உதவுகின்றது.

இம்மலர் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் புகைப்படங்களைத் தாங்கி வருவது மேலும் மலருக்கு பெருமை சேர்க்கின்றன.

மலரின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அன்னையை பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க! வளர்க!!

*திருமதி. புஷ்பா மனோகரன்*

*உபஅதிபர்*

# பாடசாலை நிறுவிய காலம் தொடக்கம் இன்று வரையான அதிபர்களின் விபரம்

| அதிபர்கள் | தொடக்கம் | வரை |
|---|---|---|
| 01. திரு. சே. கணபதிப்பிள்ளை | 24.10.1928 | 26.01.1962 |
| 02. திரு. நீ. சி. முருகேசு | 27.01.1962 | 27.05.1963 |
| 03. திரு. வே. செல்லத்துரை | 28.05.1963 | 30.09.1965 |
| 04. திரு. க. சுப்பிரமணியம் | 01.10.1965 | 08.01.1970 |
| 05. திரு. C. S. இராசையா | 09.01.1970 | 31.12.1970 |
| 06. திரு. சி. வல்லிபுரம் | 01.01.1971 | 01.08.1971 |
| 07. திரு. ச. முத்தையா | 02.08.1971 | 31.07.1973 |
| 08. திரு. சீ. நவரத்தினம் | 01.08.1973 | 31.12.1975 |
| 09. திரு. ப. சிவசுப்பிரமணியம் | 01.01.1976 | 30.04.1985 |
| 10. திரு. க. சோதிலிங்கம் | 01.05.1985 | 31.06.1986 |
| 11. திருமதி. ம. சரவணமுத்து | 01.07.1986 | 12.07.1988 |
| 12. திருமதி. ப. கார்த்திகேசு | 13.07.1988 | 21.07.1988 |
| 13. திரு. த. தர்மலிங்கம் | 22.08.1988 | 05.05.1999 |
| 14. திரு. க. ஆனந்தராசா | 06.05.1999 | |



திரு. சே. கணபதிப்பிள்ளை
24.10.1928 - 26.01.1962



திரு. நீ. சி. முருகேசு
27.01.1962 - 27.05.1963




திரு. க. சோதிலிங்கம்
01.05.1985 - 31.06.1986




திரு. ப.சிவசுப்பிரமணியம்
01.10.1965 - 08.01.1970



திருமதி. ம. சரவணமுத்து
01.07.1986 - 12.07.1988



திரு. த. தர்மலிங்கம்
22.08.1988 - 05.05.1999



எங்கள் அதிபர்

**கவிமணி. க. ஆனந்தராசா அவர்கள்**




## எங்கள் ஆசிரியர் குழாம்

**இருப்பவர்கள்**


திருமதி. இ. ஜெயசிங்கம், திருமதி. இ. சிவலிங்கம், திருமதி. போல்கமல்ராஜ், அதிபர், திருமதி. பு. மனோகரன் (உபஅதிபர்), திரு. S. தயாபரன், திரு. S. ஜெயசோதிவரதன்

**நிற்பவர்கள்**

திருமதி. செ. ஸ்ரீதரன், செல்வி. வே. சிவயோகராணி, திருமதி. G. சயந்தராஜன், திருமதி S செல்வராஜா செல்வி.வ.இந்துமதி. திரு. S. செல்வேந்திரன், திரு. S. கௌரிஹாசன், திரு. G. அன்ரன் பிறேமதாஸ்



அபிவிருத்திச்சங்க நிர்வாக உறுப்பினர்கள்
திரு. இ. விமலபாலச்சந்திரன் (செயலாளர்) அதிபர், உபஅதிபர்
திருமதி. ஜெ. வேல்ராஜா, திரு. S. தயாபரன், திரு. S. சபாரத்தினம் உப தலைவர்
திரு. ஞா. அன்ரன்பிரேமதாஸ் (பொருளாளர்), திருமதி. இ. சிவலிங்கம்



இருப்பவர்கள்
திரு. இ. கிருபானந்தா, திரு. இ. இராஜகோபாலு, திருமதி. ப. கதிரவேலு (ப.த)
அதிபர், திரு. தேவராஜா (ஆ.உ.க.ப. தென்மராட்சி), திருமதி. ஆ. இராஜரட்ணம் (இ.அ)
திரு. பொ. பாலசுப்பிரமணியம்
நிற்பவர்கள்
திருமதி. ஸ்ரீஸ்கந்தராசா, செல்வி. ப. பராசக்தி, திருமதி. சி. நவசீலன், செல்வி. வ. இந்துமதி,
திருமதி. ம. பரமானந்தம், திருமதி. வி. இந்திராணி, செல்வி. மா. குணநாயகி,
திருமதி. பு. மனோகரன், திருமதி. இ. சிவலிங்கம், திருமதி. நாகேந்திரராஜா

# எங்கள் பாடசாலை....

தமிழொடு சைவம் தழைத்தோங்கும் யாழ் மண்ணிற்குப் பெருமை சேர்க்கும் ஊர்களுள் உரும்பிராயும் ஒன்றாகும். இவ் உரும்பிராய் யாழ் பலாலிசாலையில் 7km தொலைவில் அமைந்த ஓர் சிற்றூர் ஆகும். இவ்வூருக்கு அழகு சேர்ப்பன இங்குள்ள ஆலயங்களும், வித்தியாலயங்களுமே. இவற்றுள் யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையும் ஒன்றாகும்.

இவ்வூரில் பல அறிஞர்களையும், ஆற்றல் மிக்கோரையும் உருவாக்கும் தன் பணியை 1928இல் தொடங்கி இன்றுவரை தொடரும் தனிச் சிறப்புடன் மிளிர்கிறது இவ் வித்தியாசாலை. இவளின் நீண்ட வரலாற்றை இச் சிறு மலரில் அடக்குவது எத்துணை கடினமானது என்பது துறை சார்ந்தோர் புரிவர். அதிபரின் அகத்திலிருந்து வந்ததற்கு அமைவாக மிகச் சுருக்கமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

ஆரம்பகாலத்தில் உரும்பிராய் இந்துக் கல்லூரியுடன் இயங்கிவந்த இப் பாடசாலை, மலாயன் பென்சனர் திரு. ஆ. வேலுப்பிள்ளை அவர்களால் 1928ல் உரும்பிராய்ச் சந்திக்கு அருகாமையில் 2 பரப்புக் குத்தகைக் காணியில் ஆரம்பிக்கப்பட்டது. கரவெட்டி திரு. சேதர் கணபதிப்பிள்ளை அவர்களின் தலைமையில் ஏழு (7) ஆசிரியர்களையும் 139மாணவர்களையும் கொண்டிருந்த வேளையில், இது யாழ் இந்துக் கல்லூரி அதிகார சபையாரால் ஏற்றுக்கொண்டதாக அறியமுடிகிறது. பின்னர் 1941இல் கற்பக விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான 2 ஏக்கர் 1 றூட் பரப்பளவுள்ள இப்போதைய காணியில் இடமாற்றப்பட்டு தொடர்ந்து தனது கல்விப் பணியைக் கவினுற ஆற்றி வளர்ந்து வருகின்றது. 1746இல் குடிநீர் வசதிக்காக கிணறு வெட்டப்பட்டது. திரு. இ. துரைராஜா, திரு. அ. நல்லதம்பி ஆகிய இவ்வூர்ப் பிரமுகர்களின் உதவியினால் நீர்த்தொட்டி அறையும்,. தாங்கியும் அமைக்கப்பட்டு குழாய் நீர் வசதி ஏற்படுத்தப்பட்டது.

இதேவேளை சிவனெறிப் புரவலர் திரு. க. கனகராஜா J.P அவர்களால் இவர்தம் பாரியார் நினைவாகவும் இவருடன் சேர்ந்து திரு. முத்து செல்லத்துரை அவர்களாலும் கிறாதிகள் இட்டு தடுப்புகள் அமைத்து இரண்டு மண்டபங்கள் சீரமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. 01.05.1962இல் பாடசாலை அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது. 1995இல் இடப்பெயர்வுக்கு முன்

படிப்படியாக வளர்ச்சியடைந்து பல மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் ஆண்டுதோறும் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இடப்பெயர்வின் பொழுது பாடசாலையின் பௌதீக வளங்களான 70' x 20' மண்டபமும் ஆண், பெண்களுக்கான மலசலகூடத் தொகுதியும் 500' நீளமான சுற்றுமதிற் சுவர்களும் பெருமளவு பாடசாலைத் தளபாடங்களும், சொத்துக்களும் அழிக்கப்பட்டு இழக்கப்பட்டு பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டது.

மீண்டும் அதிபர் திரு. த. தர்மலிங்கம் தலைமையிலான ஆசிரியர் குழுவினது அயராத சேவையினால் மெல்லத் தங்கள் பணியினைத் தொடங்கி பாசாலையைச் சீராக்கம் செய்யத் தொடங்கினர். இவ்வேளையில் திருமதி. தவராசா அவர்களும் பெற்றோர்களும் சேர்ந்து ரூபா 50,000க்கு மேல் அபிவிருத்திச் சங்க நிதி சேர்த்து உழைத்தமை குறிப்பிடத்தக்கது. தற்போதைய அதிபர் 1999/05/06ந் திகதி தமது பணியை ஏற்றார். இவரது முயற்சியினால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப பட்டிருக்கின்றன.

- **இதுவரை காலமும் பாடசாலைக்கென ஓர் தனித்துவமான இலச்சினையோ, மகுடவாசகமோ இல்லாதிருந்த நிலையை மாற்றி "ஓதுவதொழியேல்"** என்ற ஔவையின் வாசகத்தை மகுட வாசகமாக்கி அன்னை சரஸ்வதியை அதற்குள் இருத்தி இப்போ மிளிரும் இலச்சினை உருவாக்கப்பட்டது.
- ஆலயம் போலவே அன்னைக்கு உறையுள் உருவாக்கப்பட்டுள்ளது.
- அத்தோடு ஏற்கனவே இருந்த பாடசாலைக் கீதத்தைப் புனரமைத்து மகுடவாசகத்தை உள்ளடக்கிய **சங்கராபரண ராக புதிய கீதம் அதிபரால் மாற்றி இயற்றப்பட்டு இசைக்கப்பட்டு வருகிறது.**
- மாணவத் தலைவர்களுக்கும், வகுப்புத் தலைவர்களுக்கும் சின்னங்கள் தனித்துவமாக உருவாக்கப்பட்டு சின்னஞ்சூட்டும் வைபவமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.
- பெண்களுக்குரிய கழுத்துப்பட்டிபோல் ஆண்களுக்கும் தனித்துவமான U.S.V எனும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சட்டைப்பை கொண்ட சீருடைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- இச் சிறார்களின் கையெழுத்துச் சஞ்சிகைகளான **'தளிர்' 'வாடாமலர்'** என்பன முறையே 1999 இலும் 2000இலும் மாகாணமட்டப் போட்டிகளிற்காகத் தெரிவாகின.

- **பாடசாலை வரலாற்றில் முதன் முதலாகப் புத்தாயிரத்தில் 'உதயநிலா'** எனும் மாணவர் இதழ் வெகு சிறப்பாக வெளியிடப்பெற்றது. **இன்றும் தொடர்கிறது.**
- **கடந்த பதினைந்து வருடங்களாக** நடைமுறையில் இல்லா பரிசளிப்புவிழா புத்தாயிரத்தொன்றிலிருந்து தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்காக **உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடாக் கிளையினரால்** ரூபா 2,39800.00 நிரந்தர வைப்பிலிட்டு அதன் வட்டியை வருடாவருடம் பாவிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.
- ஆண்களுக்கான மலசலகூடத் தொகுதி ஒன்றும் 110' x 25' நீளமான மாடித்தள அறைகள் (5) (GTZ) ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினரின் கருணைக் கொடையினாலும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினராலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. திறனற்ற தொழிலாளர்களுக்கான ரூபா 50,000 உ. இ. ப. மா சங்க கனடாக் கிளையினரால் வழங்கப்பட்டது.
- யாழ் றோட்டறிக் கழகத்தினர் அழிந்த மதிலுக்குப் பதிலாக அழகான வேலி அமைத்துத் தந்து அரும்பணியாற்றியுள்ளனர்.
- பாடசாலைப் பெயர்ப் பலகையும், படலையும் (Gate) மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ளன.
- மின்சார வசதி, குடிநீர்க் குழாய் வசதிகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- பாடசாலையின் திட்டமிட்ட செயற்பாடுகளாக 1ம் தவணை விளையாட்டுப் போட்டியும், 2ம் தவணை பரிசளிப்பு விழாவும், 3ம் தவணை **'உதயநிலா'** மாணவர் சஞ்சிகை வெளியீடும் தொடர்கிறது. காலத்தின் தேவை கருதி இவை அனைத்தினதும் வடிவங்கள் மாறலாம். ஆனால் அனைத்தும் அழகாக நிறைவுற அன்னை அருள்புரிகிறாள்.
- ஆன்மீக களப் பயணத்தில் **பிடி அரிசி தர்மப்பணி** வலியுறுத்தப்பட்டு ஏதாவது ஒரு பொருத்தமான ஆலயத்திற்கு இது வழங்கப்படுகிறது. இது வருடாவருடம் தொடர்ந்து நடைபெறுகிறது. நயினை இருதடவை, சந்நிதி, நல்லூர், காரைநகர் சிவன் ஆகிய தலங்களைத் தரிசித்ததுடன் சந்நிதியான் ஆச்சிரமத்திலும், நாவலர் கலாச்சார மண்டபத்திலும் பஜனையும், கலை நிகழ்வுகளையும் மாணவர் வழங்கியுள்ளனர்.
- தனித்துவமான நவராத்திரி பூஜை, கலைவிழா, விஜயதசமியில் வித்தியாரம்பம் அனைவருக்கும் மாகேஸ்வர பூஜை (அன்னதானம்) என்பன எதுவித குறைகளுமின்றி வருடாவருடம் வழங்கப்பட்டு வருகின்றன.
- இயங்காதிருந்த ஆசிரிய கழகம் புனரமைக்கப்பட்டு ஆசிரியர்களது பணிப்பாராட்டுக்கள், பல்வேறுவகை கொண்டாட்டங்களில் பங்கேற்றல் என்பன பாங்குடன் தொடரப்படுகிறது.

- அத்துடன் வருடாவருடம் **சிறுவர் தினத்தில்** சிறுவர்களுக்கு விழா எடுத்து அன்பளிப்புகள் எம்மால் வழங்கப்பட்டு வருவதோடு தவணை இறுதி ஆசிரியர்களுக்கு மதியபோசனத்துடன் நிறைவுறுகின்றது.
- கிளி / சோரன்பற்று அ. த. க. பாடசாலையை இடம்பெயர்ந்த வேளை அரவணைத்து இவர்களுடன் சகல பாடசாலைச் செயற்பாடுகளையும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளையும், விழாக்களையும் இரு வருடங்களாக கொண்டாடியமையை படங்கள் பகர்கின்றன.
- தென்மராட்சி இடப்பெயர்வின் பொழுது 300க்கு மேற்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டு இரு வாரங்கள் வரை எம்மால் போஷிக்கப்பட்டதுடன் 3 மாத காலங்களுக்கு அவர்களின் 23 குடும்பங்களை எமது பள்ளியின் ஒரு பகுதியில் உறையுள் கொடுத்து அரவணைத்தமை குறிப்பிடத்தக்கது.
- இன்றுவரையான இவ் வருட சாதனை வரலாற்றில் முதன்முதலாக உதைபந்தாட்ட மூன்று குழுக்களும் பங்குபற்றி இதில் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் குழு கோட்டமட்டத்தைத் தாண்டி வலய மட்டத்திற்கு சென்றுள்ளது. வெற்றிவாய்ப்பை எதிர்பார்த்து நிற்கின்றது. தாச்சிக்குழு வலயமட்டத்திற்கு சென்றது. அத்துடன் தையல்போட்டியிற் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளார்கள். இம்முறை இரு மாணவர்கள் புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்தமை சிறப்பு.
- ஆசிரியர் தொடக்கம் மாணவர் வரை பல விருதுகளைப் பெற்றமை படங்கள் பறைசாற்றுகின்றன. **இச் சிறு பள்ளியின் இமய சாதனை செல்வன். ச. துஷ்யந்தனால்** ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இலண்டன் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கிளை 41 சோடி A-type மாணவர் கதிரை, மேசை அன்பளித்தமையும், இவ்வூர் க. இராசதுரை குடும்பத்தினரின் அன்பளிப்பால் கிடைத்த மின்மோட்டர் மூலம் எமது குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்திருப்பதும் குறப்பிடத்தக்கவை.


அத்துடன் காலத்திற்குக் காலம் சிறு சிறு உதவிகளை கிறசர் தூள் Hose pipe என்பன தங்கள் இயல்புகளுக்கேற்ப பொருட்களாக வழங்கிய எம் பெற்றோர்களின் பங்கைப் பாராட்டாது இருக்கமுடியாது.

பல வேலைத்திட்டங்கள் இன்றும் உள. உங்கள் ஒத்துழப்பு இருப்பின் அவை சாத்தியமானவையே.


**அத்தியவசியமானவை**

1. மேல்மாடிக் கூரை அமைப்பு,
2. பாடசாலை சுற்றுமதில் 800' நீளமானது.


ஆர்வமுள்ளோர் அன்போடு வருக. தொடர்பு கொள்க. உதவுக.




உதய நிலா வெளியிட்டு நிகழ்வு




உதய நிலாவின் முதல் உதயம்
2000




பாடசாலை வரலாற்றின் முதல்
உதயநிலா மாணவர் சஞ்சிகை
வெளியீடு அதிபர், கோப்பாய்
கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர்



தரம் ஒன்றின் தைப்பொங்கல்



அகில உலக ஆசிரியர்
தினத்தின் போது



ஆசிரியர் தின விழா

# புதுமை புகுத்திய நக்கீரர்

*பேராசிரியர்.எஸ். சிவலிங்கராஜா*
*தமிழ்த்துறைத் தலைவர், யாழ் பல்கலைக்கழகம்*

சங்க இலக்கியமாகிய பத்துப்பாட்டினுள் ஏழாவதாக அமைந்திருப்பது நெடுநல்வாடை, தலையானங் காலத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைத் தலைவனாகக் கொண்டு நக்கீரர் என்னும் பெரும் புலவர் இதனைப் பாடியுள்ளார். இது 188 அடிகளைக் கொண்டது.

தமிழ் இலக்கிய சரிதத்திலே நக்கீரர் என்ற பெயரிலே பல புலவர்கள் வாழ்ந்துள்ளனர். இவர்கள் வெவ்வேறு காலங்களைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது. நக்கீரர் என்ற பெயரிலே வாழ்ந்த புலவர்கள் தமிழ் இலக்கியப் பரப்பிலே ஏதோ ஒரு வகையிற் புரட்சி - புதுமை செய்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

பரிசில் பெற்ற கலைஞர்குழாம் பரிசில்பெற விரும்பிய கலைஞர் குழாத்திற்கு வழிகாட்டுவதாக அமைந்ததே ஆற்றுப்படை என்னும் இலக்கிய வடிவம். இவ்வடிவத்தை முருகக் கடவுளிடம் அருள் பெற்றான். ஒருவன் அவன் அருளைப் பெற விரும்பிய இன்னொரு அடியானுக்கு வழிகாட்டுவதாக மாற்றித் திருமுருகாற்றுப்படையாக நக்கீரர் பாடியுள்ளார். திருமுருகாற்றுப்படை ஆசிரியர் ஆற்றுப்படை வடிவத்தின் பொருள் மரபிலே மாற்றமொன்றையே செய்துள்ளார் எனலாம்.

"கொங்கு தேர் வாழ்க்கை அம்சிறைத் தும்பி" என அமைந்த இறைவன் பாடலிற் பிழைகண்டு, நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமேயெனக் கூறிய சத்திய நேர்மை பொருந்திய நக்கீரர் என்னும் புலவர் ஒருவரையும் தமிழ் இலக்கியப் பரப்பிலே பார்க்கிறோம்.

"சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்" எனும் தொல்காப்பிய விதியிலிருந்து விலகி அடையாளப் பூச்சுட்டி அகத்திணை சார் நூலொன்றினைப் பாடிய நெடுநல்வாடை நக்கீரரும் மரபுமாற்றம் ஒன்றையே செய்துள்ளார். தமிழ் இலக்கியப் பரப்பிலே ஏதோ ஒரு வகையிற் புதுமை புகுத்திய புலவர்களை நக்கீரர் என்னும் பெயரால் அழைத்தார்களோ என்ற ஐயமும் தோன்றுகின்றது.

சங்க இலக்கியங்களிலே பாடற் பொருளால், அமைப்பால், உத்திவகையால், உணர்வுநலனால் முன்நிற்பவைகளுள் நெடுநல்வாடைக்குச் சிறப்பானதோர் இடமுண்டு. புலவரின் கற்பனைத திறம், ஆழ்ந்த புலமை, நுணுக்கமான அவதானிப்பு, கவித்துவம் முதலியவற்றை நெடுநல்வாடையிலே நிறையக் காணலாம்.

போர் காரணமாகப் பிரிந்து சென்ற தலைவனை நினைந்து வருந்துகிறாள் தலைவி. அவளது பிரிவுத்துயர் நீங்கும் வண்ணம் வினைமுடிதல் வேண்டிக் கொற்றவையை பரவும் தோழி அவன் விரைவிலே வருவான் எனக் கூறுவதாக அமைந்துள்ளது இப்பாட்டு.

நெடுநல்வாடை (நெடு + நல் + வாடை) எனும் தலைப்பிலேயே பொருள் இனிமை உண்டு என்பர். இது நெடிதாகிய நல்லதோர் வாடை என விரியும். கோப்பெருந்தேவிக்கு நீண்டதோர் வாடையாகவும், பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு நல்லதோர் வாடையாகவும் அமைதலின் இது நெடுநல்வாடையாயிற்று என்று அறிஞர் கூறுவர்.

நெடுநல்வாடையை அகமும் புறமும் ஒருங்கிணைந்த நூல் எனலாம். "வேம்புதலை யாத்த நோன்கா ளெ..கமொடு" என்ற தொடர் பாண்டியனை இனங்காட்டுவதால் இதனைப் புறத்திணையின்கண் சேர்த்தனர் என்பர். இப்பகுப்பு இலக்கிய உலகிலே இலக்கணம் செலுத்திய ஆதிக்கத்தின் வெளிப்பாடு என்று குறை கூறுவோரும் உளர். "தலைவியை நோக்கும் போது அகத்திணையாகவும்" தலைவனை நோக்கும்போது புறத்திணையாகவும் இச்செய்யுள் அமைந்துள்ளது என்று பேராசிரியர எஸ். வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுவர். எனினும் பொருள் அமைப்பின் அடிப்படையில் அகப்பொருளே விஞ்சிக் காணப்படுகின்றது எனலாம்.

அகமும் புறமும் கலந்து நெடுநல்வாடை நாடகப் பாங்கிலே அமைக்கப் பட்டிருக்கிறது என்பதும் உண்மையே. கைதேர்ந்த படப்பிடிப்பாளன் தன் "கமராவு"க் கூடாகப் (Camera) பல விஷயங்களைத் தேவைக்கேற்றபடி காட்டுவது போல நக்கீரரும் பல நிகழ்வுகளைத் தேவைக்கேற்றபடி மாறிமாறிக் காட்டிச் செல்லுகிறார். நவீன நாடக அரங்க முறைகளைக் கையாண்டு நெடுநல்வாடையை நல்லதொரு நாடகமாக அரங்கேற்றலாம் என்று கருதுவதும் தவறாகாது.

நெடுநல்வாடையை நக்கீரர் குளிருடனேதான் ஆரம்பிக்கின்றார். **"பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்து"** சிறிது ஆறியிருக்கின்றது. தூறலும் துமியும் விழுந்தவண்ணம் இருக்கின்றன. ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. இடையர்கள் தம் மந்தைக் கூட்டங்களைத் தமிமிடத்திலே வைத்திருக்க முடியாமல், வேற்றிடத்து மேட்டு நிலத்திலே மேயவிட்டுத் தமது குளிர் நடுக்கம் மாறத் தீமூட்டிக் குளிர்காய்கிறார்கள். விலங்குகள் இரை தேடவும் செல்லாமல் நடுங்கி ஒடுங்கி இருக்கின்றன. குரங்குகள் குளிர் மிகுதியால் நடுக்கமெய்திக் "கூனிக் குறாவி" இருக்கின்றன. குளிர் காற்றின் கொடுமையால் கொம்பர்களிலிருந்த குருவிகள் கீழே விழுகின்றன. எனினும் கொக்குகளும் நாரைகளும் புதுப்புனல் ஓட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாது, விலகித் தேங்கி நிற்கும் நீர்நிலைகளிலே தத்தித் தத்தி மீன்கொத்துகின்றன. குளிர் வாடையால் பசுக்கள் கன்றுகளைக்கூட உதறி வெறுக்கின்றன. நீர்வளத்தால் நெற்பயிர்கள் செழித்து வளர்ந்து கதிர்கள் முற்றிக் தலைசாய்த்து நிற்கின்றன. கமுகுகள் காய்த்துச் செழிப்பாகக் காணப்படுகின்றன. பூஞ்சோலைகளிலே பூக்கள் மதத்து நீர் சிந்துகின்றன. சங்ககாலச் சமூகத்திலே கிராமத்தில் பொழிந்த கடும் மழையையும் "அடைமழை" கொடுத்த கொடுங் குளிரையும் புலவர் மிக நுட்பமாகப் புலப்படுத்தியுள்ளார். "அடைமழை" காலத்தில் கிராமத்தின் அழகினைக் காட்டிய புலவரின் "கமரா" நகரத்தை நோக்கித் திரும்புகிறது.

ஆறுகிடந்தன்ன அகன்ற நீண்ட தெருக்கள், அத்தெருக்களிலே கள்ளுண்ட மிலேச்சர்கள் மழைத்துமியையும், குளிர்வாடையையும் பொருட்படுத்தாது திரிவதைப் புலவர் பின்வருமாறு காட்டுகிறார்.

"ஆறுகிடந்தன்ன அகநெடுந் தெருவிற்
படலைக் கண்ணி பரேரெறுழ்த் திணிதோள்"
"முடலை யாக்கை முழுவலி மாக்கள்

வண்டுமூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்துளி பேணார்"

இந்த அடிகள் தெருக்காட்சியை எம் மனத் திரையிலே பதியவைக்கின்றன.

தெருவின் இருமருங்கும் உள்ள பெண்கள் பிச்சிப் போதுகள் மலர்ந்து நறுமணங் கமழுதலைக் கண்டு மாலைப் பொழுதையறிகின்றனர். இரும்புத் தகளியிலே நெய்வார்த்துத் திரியிட்டு விளக்கேற்றி நெல்லும் மலரும் தூவி வணங்குகின்றனர். மாலை நேர அங்காடி கலகலப்பாக இருக்கின்றது. குளிராலும் இருளாலும் இரைதேடச் செல்லாத ஆண் புறாக்கள தம் பேடுகளுடனே அசைந்தசைந்து அருகிருக்கின்றன. ஏவலாளர்கள் கத்தூரி முதலிய கூட்டுக்களை அரைக்கிறார்கள். வேனிற்காலப பயன்பாட்டுச் சாதனங்கள் யாவும் மூடியுறையிட்டு வைக்கப்பட்டுள்ளன. சாளரங்கள் யாவும் குளிர்வாடை புகாதபடி பூட்டப்பட்டிருக்கின்றன. இளைஞரும், முதியோரும் தீ வளர்த்துக் கூதல் காய்கின்றனர். ஆடல் மகளிர் கடுங்குளிராகையால் ஆடலை விடுத்துத் தம்மார்பகச் சூட்டினால் யாழ் நரம்புகளுக்கு வெம்மையூட்டிப் பாட்டிசைக்கின்றனர்.

நகரப்புறத்தை நுணுக்கமாகக் காட்டிய புலவர் அரண்மனையை அழகுறப் படம்பிடிக்கிறார். ஓங்கி உயர்ந்தகன்ற மாளிகையின் முகப்பினைப் புலவர் பின்வருமாறு காட்டுகிறார்.

"நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டு
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கி
பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்பமனை வகுத்து
.............................................................................
வென்றெழு கொடியோடு வேழஞ் சென்றுபுக்
குன்று குயின்றன்ன ஓங்கு நிலைவாயில்
திகுநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்"

யானை செல்லக்கூடிய மலை குடைந்த குகைபோலும் வாயிலையுடைய அரண்மனை முகப்பினைக் காட்டிய புலவர் அம் முகப்பிலே நிகழும் காட்சிகளையும் திறம்படக் காட்டுகிறார். அரண்மனை வாயிலிலே கவரிமானும் அன்னமும் தாவித் திரிகின்றன. அரண்மனைக் குதிரைகள் பந்தியை முனிந்து உணவை வெறுக்கின்றன. அரண்மனைக்குள்ளே யவனர் தந்த வினைமாண் பாவைகள் விளக்கேந்தி அழகு செய்கின்றன. கவிஞரின் "கமரா" அந்தப்புரம் திரும்புகிறது. அந்தப்புரத்தின் சிற்ப சித்திர வேலைப்பாடுகளைச் சிறப்புறக் காட்டித் தலைவியின் கட்டில் பக்கம் தன் கவனத்தைச் செலுத்துகிறார்.

சிற்ப வேலைப்பாடமைந்த கட்டிலிலே, மெல்லிய உரோமத்தாலியன்ற சித்திரப்பூ மெத்தையிலே தலைவி தனியே படுத்திருக்கிறாள். கணவனின் நினைவால் துவண்டுபோய் இருக்கிறாள். படுக்கை நோகிறது. பல வகையான ஆபரணங்களை எல்லாம் அணிந்து மகிழும் அரசியின் மார்பிலே திருமாங்கல்யம் மாத்திரமே இருக்கின்றது. புனையா ஓவியம் போலத் தலைவி அந்தப்புரத்திலேயிருந்து பிரிவுத் துயரால் வருந்துகிறாள். பிரிவுத் துயருக்கேற்ற பின்னணிக் கோலங்கள் சிறப்பாகச் சித்திரிக்கப்படுகின்றன. தலைவியின் துயருக்குக் காரணமான தலைவனின் பக்கம் புலவர் திரும்புகிறார்.

பள்ளியறையின் நினைவே இல்லாதவனாக பாசறையிலே பாண்டியன் காட்டப்படுகிறான். நள்ளென் யாமத்தும் பள்ளிகொள்ளாதவனாகத் தன்

மெய்காப்பாளரோடு "பாசறைத் தொழிலிலே" அரசன் ஈடுபட்டிருக்கிறான். போர்க்களத்திலே காயப்பட்ட வீரர்களைப் பார்த்தூக்கமளிக்க அரசன் புறப்படுகிறான். தீப்பந்தங்களின் சுடர்கள் வாடைக்காற்றால் தென்திசை நோக்கிச் சாய்ந்து எரிகின்றன. யானைகளும் குதிரைகளும் ஈர நிலத்தைச் சேறாக்கி வைத்திருக்கின்றன. அவை குளிரை வெறுத்து ஒலியை எழுப்புகின்றன. இந்த இடத்திலே தான் "வேம்பு தலையாத்த நோன்கா ளெ·.கம்" குறிப்பிடப்பட்டுள்ளது வேண்டுமென்ற அடையாளப் பூச்சுட்டி இருக்கவேண்டும். அகப்பாடலிலே புரட்சி செய்யப் புலவர் விரும்பியிருக்கலாம்.

சங்க இலக்கியங்களிலே உரிப் பொருளை வலியுறுத்த முதற் பொருளும் கருப்பொருளும் சிறப்பாகக் கையாளப்படுவது வழக்கமாகும். முதலும் கருவுமே பகைப்புலமாக நின்ற உரிக்கு உயிர் கொடுப்பன. நக்கீரர் மிகவும் நுணுக்கமாகப் பாடுபொருளுக்கேற்ற பின்னணியைக் கையாண்டுள்ளார். ஒரு வகையில் குறியீடாகவும் புலவர் தம் கருத்தினைப் புலப்படுத்துகின்றார்.

"ஏறுடை இனநிரை வேறுபுல பரப்பி
புலம்பெயர் புலம்பொடு கலங்கி"

கோவலர் தனியே பசுக்களை மட்டுமல்ல, நாம்பனும் பசுவுமாக, கிடாயும் மறியுமாக அல்லவா ஓட்டிச் செல்லுகிறார்கள். கோவலர் கலங்கிப் பிரிய அவர் மனைகளிலே "இருத்தல்" தானே நிகழும்.

பெண் குரங்குகள் குளிரால் நடுங்குகின்றன. எனப் புலவர் குறிப்பிடுவதும் தாம் எடுத்துக்கொண்ட பொருளைச் சிறப்புறப் புலப்படுத்தவே எனக் கருதலாம். இத்தகைய பல நிகழ்வுகளை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுவதனூடு தலைவியின் பிரிவுத்துயர் மிகைப்படுத்தப்படுகின்றமை புலவர் கையாளும் உத்தியேயெனலாம்.

குளிர்வாடையைப் பற்றிச் சிந்திக்க நேரமின்றி இருக்கும் பாசறையிலே தீப்பந்தங்கள் தெற்கு நோக்கிச் சாய்ந்தெரிந்தும் மன்னனின் மனம் தெற்குத் திசைக்குத் (மதுரைக்கு) திரும்பவில்லையே.


பலவகையான நிலங்களும் நிறைந்த நெடுநல் வாடையினூடு பண்டைத் தமிழகத்தின் பண்பாட்டுக் கலாசார கோலங்கள் சிறப்பாகப் படம்பிடிக்கப்பட்டுள்ளன. உதாரணமாகப் பின்வரும் நிகழ்வைச் சுட்டிக் காட்டலாம். மாலை நேரமானதும் பெண்கள்

"இரும்புசெய் விளக்கி னீரந்திரிக் கொளிஇ
நெல்லும் மலரும் தூஉய்க்கை தொழுது"


வழிபடும் மரபைப் பார்க்கிறோம்.

நெடுநல்வாடையிலே சங்ககால மக்களின் சிற்பம், சித்திரம், கட்டிடக்கலை பற்றிய தகவல்கள் நிறைய இடம்பெற்றுள்ளன. இலக்கிய ஆராய்ச்சியாளருக்கு மாத்திரமன்றிச் சமய, சமூக, கலாசார ஆய்வாளர்களுக்கும் நன்கு பயன்படக் கூடிய சிறந்த இலக்கியமாக நெடுநல் வாடையைக் குறிப்பிடலாம். நெடுநல் வாடைக்கு நச்சினார்க்கினியர் சிறப்பான உரையொன்றை எழுதியுள்ளார்.


**ஆசிரியம் அவனியிலே தொழிலல்ல மாறாக**
**பாரினிற்கு சேவையெனப் பகர் (உறை) - அன்னைதாஸன்**




இணைந்த வலயத்தின்
இன்பப் பிரமுகர்
திரு. கணேசன் (உ.க.ப.சாவ.)
திரு. த. இராசலிங்கம் (உ.க.ப.யாழ்)




மீண்டும் தொடங்கிய மிருக்கின்
முதல்விழாவில்
திரு.நல்லதம்பி (த.பு.க)
திருமதி. சிங்கராசா (முன். ஆசிரியர்)




தென்மராட்சி இணைந்த வலயத்தின்
இன்னுமோர் விழா
திரு. சத்தியநாதன் (உ.க.ப.சாவ.)
திரு. அரியரட்ணம் (உ.க.ப.யாழ்)



சத்தியமே எம் வழி



இல்லக்கொடி இனிதாக ஏற்றுதல்



இனிய பிரமுகர்
லயன் த. நடராஜா

# ஏனிந்த வெளிநாட்டு மோகம்

*எம். ரி. செல்வராஜா,*
*இலண்டன்*

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்று கூறிவைத்தனர் எமது முன்னோர்கள். ஆனால் இப்போது 'திரைகடலோடித்தான் திரவியம் தேடவேண்டும்' என்பது போல் எல்லோரும் எண்ணுகின்றார்கள். எப்படியாவது தமது பிள்ளைகளில் ஒன்றையாவது 'ஏஜென்சி' மூலமாகவோ அல்லது யாருக்காவது திருமணம் செய்து கொடுத்தோ வெளிநாட்டிற்கு அனுப்பவேண்டும் என்றே அநேகமான பெற்றோர் எண்ணுகிறார்கள். அடுத்து அவர்களின் பின்னால் தாமும் வெளிநாட்டிற்குச் சென்றுவிட வேண்டும் என்றும் எண்ணுகிறார்கள். இதற்கு காரணங்கள் பல.

வெளிநாடுகளிலிருந்து விடுமுறைக்காகச் செல்லும் பலர் செய்கின்ற 'விளையாட்டுக்களே' இவற்றிற்கு முக்கிய காரணம். சிறுவர் முதல் வயோதிபப் பெண்கள்வரை கைகள் நிறையவும், கழுத்து நிறையவும் ஆடம்பரமான நகைகள், காஞ்சிபுரம் சேலையைத் தவிர வேறொன்று அணியார். ஆண்களின் கையிலும், கழுத்திலும் சங்கிலிகள். மறு கையில் கைத்தொலைபேசி. 'டியிற்றல் கமெரா' வுடன் குளிரூட்டப்பட்ட மோட்டார் வண்டியிலேதான் எப்போதும் பயணம். செல்லுமிடமெல்லாம் பணத்தை அள்ளி அள்ளி வீசுவார். இவர்களைப் பார்த்தவர்கள் சும்மா இருப்பார்களா? தாமும் அப்படிச் செய்ய வேண்டும் என்கின்ற ஆதங்கம் அடிமனத்தில் உறுத்த எப்பாடுபட்டாவது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கே முயல்கின்றார்கள். 'வடலி வளர்த்துக் கள்ளுக் குடித்த' கதைதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வெளிநாடுகளுக்கு அவர்களின் அழைப்பின் பேரில் வேலை தேடிச் சென்றோர் பலராகவும், தாமாகப் படிப்பதற்காகச் சென்றோர் சிலராகவும் இருந்தது. பின்னர் எழுபதுகளில் படிப்பதற்காகச் சென்றோர் பலராகவும், வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்வோர் சிலராகவும் மாறியது. அதன்பின்னர் நாட்டில் நிகழ்ந்த போராட்டத்தின் விளைவாக பாதிக்கப்பட்டவர்களும், பாதிக்கப்படாதவர்களுமாக பலர் நாட்டைவிட்டு வெளியேறினர். பாதிக்கப்படாத பலர் தாம் வகித்த பெரிய பெரிய பதவிகளைக்கூடத் துறந்துவிட்டு வெளிநாடு சென்றார்கள். பல மருத்துவ டாக்டர்களும், பல் வைத்தியர்களும் இவற்றில் அடங்குவர். ஆனால் உண்மையில் நடந்தது என்ன? இவர்களில் எத்தனையோ பேர் வெளிநாட்டுப்

பட்டதாரிகளுக்கு நடக்கும் பரீட்சைகளில் சித்தியடைய முடியாமலும், உரிய வேலை கிடைக்காமலும், வேறு வேலைகள் செய்துகொண்டு தமது வாழ்க்கையைத் தொடருகின்றார்கள். இவர்கள் எல்லாம் இடம்பெயராமல் இருந்திருந்தால் பலருக்குப் பயனுள்ளவர்களாக இருந்திருக்கவும் கூடும் என்றே எண்ணத் தோன்றுகின்றது. 'அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை' இதுவே என் எண்ணம்.

இலண்டனுக்கு வந்துவிட்டால் எல்லோரும் 'இஞ்சினியர்களும், டாக்டர்களும்' தான் என்கின்ற நிலைமை எப்போதோ மாறிவிட்டது. தாயகத்தில் இருந்தபோது தாம் செய்யத் தயங்கிய தொழில்களையெல்லாம் புலம்பெயர்ந்த மண்ணில் செய்துகொண்டு வாழ்கின்றார்கள். இவர்களில் எத்தனை பேர் தாயகங்களுக்கு வரும்போது தமது உண்மை நிலவரங்களை எடுத்துக் கூறுகின்றார்கள்? போலிப் பகட்டுகளுக்கும், ஆடம்பரங்களுக்கும் தம்மை அடிமைகளாக்கிக்கொள்வது மட்டுமல்லாமல் பல அப்பாவி மக்களின் மனதிலும் பொய்யான ஆசைகளை வளர்த்துவிடுகின்றார்கள்.

புலத்திலிருந்து வருகின்ற பிள்ளைகளின் பணத்திலே, உடன்பிறந்தவர்களின் பணத்திலே தாயகத்தில் சொகுசுகளுடன் வாழும் பல உறவுகள், புலத்திலே அவர்கள் எவ்வளவு சிரமங்களுக்கு மத்தியில் வாழ்கிறார்கள் என்று துளியும் சிந்திப்பதில்லை. சந்தையில் மீன், மரக்கறி வாங்குவதிலிருந்து மக்களுக்குச் சீதனம் கொடுப்பது வரை பணத்தை நீராகச் செலவிடுகிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். எதற்காக இந்தப் போலிக் கௌரவம்? எம் மண்ணில் உழைத்து, உண்டுகளித்த காலம் எல்லாம் எங்கே போய்விட்டது? எம்மிடம் எத்தனைதான் திறமைகள் இருந்தாலும் பிறரின் மொழிகளைப் பேசுவதிலும், பிறருடைய நாகரீகத்தைப் பின்பற்றுவதிலும், பிறருடைய திறமைகளைத் தலைமேல் தூக்கி வைத்துப் பெருமைப்படுவதிலும் நாம் வல்லவர்கள் என்பதை பல இடங்களில் கண்டிருக்கின்றேன், வருத்தப்பட்டிருக்கிறேன்.

தாயகத்தில்தான் இப்படியென்றால் புலத்தில் உள்ளவர் எப்படி வாழ்கிறார்கள்? பெரிய வீடு யாரிடம் இருக்கிறது. 'பென்ஸ் கார்' யாரிடம் இருக்கின்றது என்கின்ற போட்டி ஒரு பக்கம். எப்பாடுபட்டாவது தமது பிள்ளைகளைத் தனியார் பாடசாலைகளில் படிக்க வைப்பதில் ஒரு பெருமை. இதனை மற்றவர் முன்னால் உரத்துச் சொல்வதில் இன்னொரு பெருமை. நுழையாவிட்டாலும் நுண்கலைச் செல்வத்தை நுழைக்க நூறு வகுப்புக்கள் செல்வார். வீணையைத் தொட்டதும் வாணி என்பார். மத்தளம் தொட்டதும் மேதை என்பார். வாயைத் திறந்ததும் வித்தகர் என்பார். நடக்கும்போதே நர்த்தகி என்பார். குழலைத் தொட்டதும் கண்ணன் என்பார். பாதி கற்றதுமே

போதுமென்பார். தேடிப்பிடித்து மேடைகள் அமைத்து, பொருந்தாவிடினும் பெரும் பொருள் கொடுத்து, பக்கவாத்தியம் பலவும் அமைத்து, அறியாதவர்க்கும் அழைப்பிதழ் கொடுத்து, விரும்பாதவரையும் வாவென்றழைத்து, வெளிநாட்டவரையும் வலிந்து இழுத்து, வரிசையாய் முன்னால் கதிரையில் இருத்தி, வார்த்தைக்கு வார்த்தை விழுந்து சிரித்து, விருந்தும் கொடுத்து வாழ்த்திட அழைப்பார். மற்றவர் பார்த்து மனதினுள் ஏங்கி, சற்றும் சிந்தியா சிற்றறிவாளராய், பித்துப்பிடித்துப் பேதலித்தலைவார். சித்தங்கலங்கிச் செய்வதறியாது வங்கிப் படியேறி வாய்விட்டுப் பொய்சொல்லி, எக்கடன் பட்டேனும் எண்ணியதை முடிப்பார். எப்படியாயினும் அரங்கினில் ஏற்றி, பிறவிப் பயனைப் பெற்றதாய் மகிழ்வார்.

தமது பிள்ளைகள் நிச்சயம் டாக்டர்களாகத்தான் வரவேண்டும் என்றே ஆரம்பம் முதல் அடித்தளமிடுவார். பரீட்சையிலே எத்தனை 'A' சித்தி பெற்றார்கள் என்றே கணக்கிட்டு மற்றவரைத் தரம் பிரிப்பார். பிள்ளைகள் டாக்டருக்குப் படிக்கவில்லையென்றால் அவர்களையும், அவரது பெற்றோர்களையும் இரண்டாந்தர மக்களாகவே கணிப்பார். ஒரு சகோதரத்தின் பிள்ளை டாக்டரானால் தனது பிள்ளையும் டாக்டராக வரவேண்டும் என்று அலைவார்கள். இருக்கின்ற நாட்டிலே அவர்களால் டாக்டருக்குப் படிக்க இயலாதுபோனால் உலகத்தில் எந்த மூலைக்காவது அனுப்பி, எத்தனை கோடி பணம் செலவானாலும், எத்தனை வருடங்கள்தான் சென்றாலும் எப்படியாவது அவர்களை டாக்டர் ஆக்கவே முயற்சிப்பார்கள். அவர்கள் படித்து முடித்ததன் பின்னரும் விட்டு வைப்பார்களா? அதுதான் இல்லை! தமது பிள்ளைகளுக்கு எந்தப் பெரிய விடுதிகளில் திருமணம் செய்து வைத்தோம், பிறந்தநாள் கொண்டாட்டத்தை நடாத்தினோம் என்று போட்டிபோடாமல் செய்வதுபோல் போட்டி போடுவார்கள். இந்தப் போட்டி பொறாமையால் எத்தனைபேர் இதய நோய்க்கு ஆளாகி உள்ளானார்கள் என்று எவராவது எண்ணிப் பார்த்தார்களா? பலருடைய செய்கைகளைப் பார்க்கும்போது 'எனக்கு இரண்டு கண்கள் போனாலும் பரவாயில்லை, எதிரிக்கு ஒரு கண்ணாவது போகவேண்டும்' என்பது போல் இருக்கிறது.

இவை மட்டுமா புலத்தில் நடப்பவை? பொது மேடைகளில் ஏறியிராத பலர் ஒருமுறை மேடையேறி மாலை அணிந்துகொண்டால், மேடையைவிட்டு இறங்கவே மறுக்கிறார்கள். தமக்குத் தெரியாதது ஒன்றுமில்லை என்று நினைப்பவர்களே அதிகமாகவுள்ளனர். புலவர்கள் என்றும், பாவலர்கள் என்றும், பொதுப் பணியாளர்களென்றும் தமக்குத்தாமே பட்டங்களைச் சூட்டிக்கொண்டு பலர் முன்னே பவனிவருகின்றார்கள். இவற்றைப் பார்க்கும்போது 'ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை' என்ற வாசகம்தான் நினைவுக்கு வருகின்றது.

தாம் புலம்பெயர்ந்து வந்த நோக்கத்தை மறந்து பலர் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறார்கள். தமது சந்ததியினரை எமது தாய்மொழி தமிழ் தெரியாமல், தாயக மண்வாசனை அறியாமலே வளர்த்துவிடுகிறார்கள். தமிழில் பேசினால் தமது தராதரம் குறைந்துவிடும் என்று தப்புக் கணக்குப் போடுகின்றார்கள். அவர்களில் பலர் தமிழ் பிள்ளைகளைத் திருமணம் செய்வதற்கே தயங்குகின்றனர். புலம்பெயர்ந்த வாழ்வில் நாம் பலர் போற்ற வசதியாக வாழ்ந்தபோதிலும், பலவற்றைப் பெருமைபடச் செய்தபோதிலும், எமது வருங்காலச் சந்ததியை இழந்துவிட்டோம் என்ற உண்மையை அவர்கள் இன்னமும் உணர மறுக்கின்றார்கள். ஆயிரம் ஆண்டுகளாக குடும்பத்தின் ஆணிவேர்களாக இருந்த எமது வீடுகளையும், நம் கால்கள் பட்டு ஓடி விளையாடிய மண்ணையும், ஒன்றாகக்கூடி மகிழ்ந்த சுற்றத்தையும் இழந்து கொண்டிருக்கின்றோம் என்கின்ற ஏக்கத்தை இதயத்துள் அடக்கி வைத்து ஆதங்கப்படுபவர்கள் எண்ணிக்கையில் குறைவாகவே காணப்படுகின்றார்கள். புலம் பெயர்ந்த மண்ணில் நாம் வந்த நோக்கம் நிறைவேறிய பின்னர், தாயகம் நோக்கிய எமது பயணத்தை ஆரம்பிப்பதுதான் சாலச்சிறந்தது. இதற்கு எத்தனைபேர் தயாராக உள்ளனர்?

புலம்பெயர்ந்துவிட்டால் ஒரு பொன்னான எதிர்காலத்தை அடையலாம் என்கின்ற கருத்து தவறானது என்பதை எத்தனைபேர் உணர்ந்து கொள்கிறார்கள்? வயதான வேளைகளில் வந்தோர் இங்கே வாழவும் முடியாமல், திரும்பிச் செல்லவும் முடியாமல் தத்தளிக்கின்றார்கள். எத்தனையோ இளைஞர்கள் ஒரு குழப்பமான மனநிலையில் எதையெதையோ எல்லாம் செய்கின்றார்கள். தமது எதிர்காலத்தை இழந்துவிட்டுத் தவிக்கின்றார்கள். இன்னும் பலர் செய்வதறியாது சிறைகளிலே அடைபட்டு அல்லற்படுகின்றார்கள். இன்னும் எத்தனை எத்தனையோ! இந்த உண்மையை சகலரும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் அறிந்தவற்றைச் சேர்த்து இங்கே எழுதினேன். எத்தனைபேர் இதனை ஏற்றுக்கொள்வார்களோ தெரியாது. ஆனால் இதனால் யாருக்காவது பயன் இருக்குமானால் நான் மகிழ்வேன்.

**பள்ளி தொடங்குவதற்கு பத்து நிமிடமேனும்**
**முந்தி நீ நிற்பதற்கு முயல்**

♣♣♣

**பத்து வருடங்கள் தமிழ் பாடுபட்டுக் கற்றவர்கள்**
**பத்திரிகை படிக்காநிலை மாற்று**

# எங்கள் குருநாதர்களை ஏற்றி வழிபடுவோம்

## எமது பாடசாலையின் தனித்துவமான ஆசிரியர் தினப்பா (மாணவர் பாடுவது)

இராகம் : பாகேஸ்வரி தாளம் : கண்டசாப்பு

அகிலமக்க ளனைவருக்கும் அறிவு மருந்தூட்டி
அவனியிலே யறியாமை நோயினையே விரட்டி
அல்லும் பகல் பாடுபடும் ஆசிரியர்க் கோர் நாள்
அக்டோபர் ஐந்தாந் திகதியெனுந் திருநாள்

பாரிலுள்ளோர் அனைவருமே பக்தியுடன் போற்றி
நேயமுட னவர்சேவை நெஞ்சங் களிலிருத்தி
ஏணிப்படி போலிருந்து எம்மை யுயர்விக்கும்
எங்கள் குருநாதர்களை ஏற்றி வழிபடுவோம்.

எண்ணுடனே எழுத்துக்களை எங்களுக்கு விளக்கி
கண்ணனைய கவின்கலைகள் கருத்துடனே பழக்கி
மண்ணதிலே மாண்புடனே வாழ வழி வகுக்கும்
கண்ணெனு மெம்மாசிரியர் கால மெல்லாம் வாழ்க!

கைத்தொழிலுங் கமத் தொழிலுங் காசினியிற் சிறக்க
எத்தகைய மாணவரும் ஏற்றமுடன் உழைக்க
முத்தெனவே செய்முறையின் நுணுக்கங்களைப் புகட்டும்
அத்தனை யாசிரியர்களும் ஆனந்தமாய் வாழ்க!

காலங்களுக் கேற்ற வண்ணம் கோலமறிந்தெம்மை
ஞானமதில் கணனியொடு மாறுகின்ற கல்வி
காலமெல்லாங் கற்ற வண்ணங் கடினவுழைப் புழைக்கும்
சீல மிகு மாமணிகள் சிறப்புடனே வாழ்க!

ஆண்டு பல நூறுகண்டு அவனியிலே வாழ்க!
வேண்டுவன அத்தனையும் பெற்று நிதம் வாழ்க!
ஆண்டவனைப் போலிருந்து அறிவுக் கண்ணைத் திறக்கும்
ஆசிய ரனைவருமே ஆனந்தமாய் வாழ்க!

***கவிமணி அன்னைதாஸன்***

# பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்களிப்பு

*ஆசிரியர். S. தயாபரன்*

இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கேற்ப பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் விஞ்ஞான தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடு காணப்படுகின்றது. இந்த நிலையில் பாடசாலை மாணவர்களின் வரவுவீதம் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் மாணவரை பாடசாலைக்கு வரவைப்பதில் பெரும் சிரமங்களுக்குள்ளாக வேண்டியுள்ளது. அதுமட்டுமல்லாது தொடர் கணிப்பீடுகளை மேற்கொள்ளும் போது மாணவரது வரவு ஒழுங்கின்மை மிகவும் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகவுள்ளது.

கல்வி என்பது அனைவருக்கும் உரியதாகும். பாடசாலைக் கல்வியை உரிய பருவத்தில் பெறவேண்டிய கட்டாயம் உண்டு. அதை தகுந்தவாறு பெறாதவிடத்து நெறிபிறழ்வான நடத்தைகளுக்குள்ளாக வேண்டிய நிலமை உருவாகின்றது. நற்பிரஜையாக, நல்ல மனிதனாக சமூகத்திற்கு ஏற்றவனாக வாழ பாடசாலைக் கல்வி மிகவும் வினைத்திறன் உடையதாக அமைவதை எல்லோரும் அறிவர். இத்தகைய வினைத்திறன் உடைய கல்வியை விஞ்ஞான தொழில்நுட்ப சாதனங்களின் ஊடாக கற்றுக்கொள்வதற்கு பாடசாலை ஒரு வினைத்திறன் கொண்ட இடமாக மிளிர்வதில் எவ்வித ஐயமுமில்லை என்பது கண்கூடு.

காலத்திற்கேற்ப கல்வியை மாணவர்கள் பெறுவதற்கு நல்ல போஷாக்கான உணவு, பயனுள்ள ஓய்வு நேரம், விளையாட்டு, வாழும் சுற்றுச்சூழல், ஒழுங்கமைப்பு, சகபாடிகளின் நன்நடத்தை, பெற்றோர்களின் ஊக்குவிப்பும், கண்காணிப்பும் மிக முக்கியமானதாகும். ஒரு பாடசாலையில் மாணவன் ஆறு மணித்தியாலத்தை அதிபர், ஆசிரியர்கள், சகபாடிகளுடன் கழிக்கின்றான். மிகுதி பதினெட்டு மணித்தியாலங்களும் பெற்றோருடன் கழிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

எனவே மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோர் பெரும் பங்காற்ற வேண்டிய கடப்பாடுண்டு. மாணவர் பாடசாலையில் கற்ற கல்வியை மீண்டும் வீட்டிலிருந்து கற்கிறார்களா என்பதை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு பெற்றோருக்குண்டு. உடல் நலத்தைப் பேணக்கூடிய போஷாக்கான உணவுகளை பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் உடல்நலத்துடன் உளநலமும் நன்றாக அமையும். தொலைக்காட்சி பார்ப்பதிலும் பயனற்ற பொழுது போக்கிலும் செல்லும் பிள்ளைகளை கண்காணித்து நல்வழிப்படுத்த வேண்டிய பொறுப்பும்

பெற்றோருக்குண்டு. மாணவன் தானாக கற்கக்கூடிய சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோருக்குரியதாகும். பாடசாலை விட்டதும் மாணவர்கள் வீட்டுக்கு வருகிறார்களா? அவர்களுடன் இணைந்து செல்லும் சம வயதுக் குழுவினர் எப்படியான பழக்கவழக்கத்தை கொண்டுள்ளார்கள் என்பதையும் பெற்றோர்கள் அவதானிக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.


சில பெற்றோர்கள் நல்ல பாடசாலையில் தான் பிள்ளை கல்வி கற்கின்றது என்ற பெருமிதத்துடன் இருப்பதை அவதானிக்க முடிகிறது. பாடசாலையில் கற்கும் கல்வி போதுமானது என்ற மனநிலையில் இருக்கின்றனர். ஆனால் ஆசரியர்கள் ஒரு விடயத்தை மாணவன் எவ்வாறு கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஒரு வழிகாட்டியாகத்தான் செயற்பட முடியும். குறிக்கப்பட்ட நேரத்துக்குள் மாணவன் அவ்விடயத்தை கற்றுக்கொள்ள முடியாது. எனவே ஆசிரியர்களின் வழிகாட்டலின்படி மாணவன் (பிள்ளை) வீட்டில் சென்று தானாகக் கற்பதற்கு பெற்றோர் முழு ஆதரவு கொடுத்து வழி நடாத்த வேண்டியுள்ளனர்.

மாணவர்கள் காலத்துக்கு ஏற்ற கல்வியை விஞ்ஞான தொழில்நுட்ப சாதனங்களினூடே பாடசாலைகளில் கற்பதற்கு சகல வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் ஒழுங்கான முறையில் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைத்து பாடசாலைக் கல்வியை பயனுள்ள கல்வியாக மாணவர்கள் பெற பெற்றோரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதொன்றாகும்.


## சிந்தனை முத்துக்கள்

- நித்திரை செய்பவனைக் கொல்வதற்கு வீரம் தேவை இல்லை. நல்ல நம்பிக்கை வைத்தவர்களை ஏமாற்ற அதிக சாமார்த்தியம் வேண்டியதில்லை.
- எப்போதும் உண்மையே பேசினால் எவற்றையும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.
- மொழி என்பது ஒரு கருவி அல்ல. அது மனித உள்ளம் படிக்கும் தேன்கூடு.
- அமைதியாய் இரு. நீ யாரையும் கவர்ந்துகொள்வாய்.
- உண்மைக்காக எதையும் இழக்கத் தயாராக இரு. ஆனால் எதற்காகவும் உண்மையை இழக்க வேண்டாம்.


*ம. துஷ்யந்தி*
*தரம் - 5 A*



பூங்காவின் முதன்நாள்




மழலைகளில் முதல்வர்கள்




கலைஞராகிய மழலைகள்



செல்வங்களின் கைவண்ணம்



களிப்புறும் மழலைகள்



கற்றல் கண்காட்சி

# சந்திரோதயத் தாயாள் சஞ்சலம் இன்றி வாழி

*விகடகவி. மு. திருநாவுக்கரசு J.P UM*
*இளைப்பாறிய மாவட்ட நீதிபதி.*

கல்வியே நாட்டின் கண்ணெனக் கண்டு கொண்டோம்.
கல்வியை இழந்தால் நாடு காடாகப் போகுமன்றோ
கல்வியை பேணா நாடும் கற்றோரை மதியா நாடும்
வல்ல நல் விலங்கு வாழும் வனமதாய் மாறுமன்றோ?

எல்லையில் கல்வி ஞானம் இருந்திடும் நாடுதன்னில்
செல்வமும் சீரும் ஓங்க சிறப்புற மிளிருமன்றோ
சொல்லரும் வீரம் ஓங்க சோர்வின்றி இளைஞர் வாழும்
நல்ல நம் நாட்டின் கல்வி நலிவுற்றுப் போகலாமோ?

சொல்லொணா இன்னல் சூழ துயரெலாம் எம்மை வாட்ட
அல்லும் பகலும் பொல்லா அழிவினைக் கண்டபோதும்
வல்லவராகி வான்புகழ் எட்ட வாழ்ந்தோம்.
நல்ல எம் தமிழர் சாதிக்கு நானிலத்து ஈடும் உண்டோ?

ஊர்புகழ் உரும்பிராய் உத்தமர் வாழும் ஊராம்
சீர்பெறு கல்வி ஞானம் சிறந்து நின்றிலங்கும் ஊராம்
பார்புகழ் வீரர் இப்பள்ளியில் படித்துயர்ந்தார்.
சீர்மேவும இந்த ஊர் சிந்தைக்கு இனியதன்றோ?

சந்திரன் உதயமானால் சார்ந்த பேர் இருள் அகலும்
அந்தமில் இன்பம் பூக்க அகம் நிறை இன்பம் பொங்கும்
சந்திரோதயம் உதித்தாள் சரித்திரம் படைத்துவிட்டாள்.
நந்தமிழ் தாயாருக்கு நற்பவள மாலையானாள்.

வந்தனை செய்து நிற்போம்
வாயாரப் புகழ்ந்து நிற்போம்
தாயாளாம் சந்திரோதயத்தாள்
தளர்வின்றி வளர்க மாதோ!

# கருவறை தொடக்கம் கல்லறை வரை...

*சிந்தனைச் செல்வர். சி. வ. ஆறுமுகசாமி* J.P
*அகில இலங்கை சமாதான நீதிவான், தலைவர், விநாயகர் சமூக சேவை.*



ஓர் பெரிய கப்பல் போன்ற எங்கள் வாழ்க்கையில் நல்லனவும், தீயனவும் ஏற்றப்படும். இதில் தீயனவற்றை அகற்றி நல்லனவற்றை மட்டும் கொண்டு சரியான முறையில் ஓட்ட ஓர் நல்ல மீகாமன் வேண்டும். வாழ்க்கையின் நோக்கங்கள் என்ன? அவற்றை நிறைவேற்றும் வழிகள் என்ன? இவற்றால் ஆகும் பயன்கள் என்ன? என்பனவற்றை உணர்ந்தறிந்து வரும் வாழ்க்கைக் கப்பலை சீராக ஓட்ட உதவுபவர்கள் ஆசிரியர்களே. நல்லாசிரியன் (குரு) அமைந்தவன் வாழ்க்கை சொல்லுந்தரமன்று.

ஆதிகால மனிதனுக்கு வாழ்க்கையே கல்வியாகியது. மனிதன் பகுத்தறியும் தன்மையினால் தீதகற்றி நல்வழியில் நடந்தமையினாற் தான் பூமிப்பந்து இன்றும் மனிதனுடன் சுழல்கிறது. கல்வியின் நோக்கம் பண்பு விருத்தியாக இருந்த பொழுதும் சிலர் இதனைக் கடைப்பிடிக்கத் தவறுவதாலேயே பூமியில் பிரச்சினை. திருக்குறள், புறநானூறு, வெற்றிவேற்கை, ஆத்திசூடி என்ற நீதி நூல்கள் எல்லாம் வாழ்க்கை முழுவதும் கற்கச் சொல்கின்றன. கற்க மறுப்பவன், வாழ மறுப்பவன் ஆகின்றான். ஜோன்டுயி, கால்மார்க்ஸ், ரூசோ, பிளேட்டோ தொடக்கம் காந்திஜி வரை கல்விக்கு வழிகாட்டிகளாக இருந்தனர். இளமையில் தொடரும் கல்வி காலம் செல்லச் செல்ல அனுபவத்தோடு கூடிய அறத்தின் செயலாய் மேலான நிலை அடைய தொண்டு செய்த மக்களாக ஆவது மட்டுமன்றி தாம் சார்ந்த சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன் உள்ளதாக மாறுகின்றது. இளமைக் கல்வியை இழந்தவன் வாழ்க்கை இடுக்கண் மிகுந்துவிடும். ஒழுக்கத்தை இளமையில் பழகியவன் இறுதிவரை ஒழுக்க சீலனாக வருவான்.

எண்ணும் எழுத்தும் கண் என்றால் அதை ஊட்டும் ஆசான் கண்ணுக்கு ஒளி கொடுக்கும் தெய்வமாகும். **இன்று கல்வி விற்பனைப் பொருளாகி வியாபாரமாக மாறிவிட்டது. வருமானம் தரும் தொழிலில் கல்வியும் ஒரு பொருளாக மாறிவந்துவிட்டது.** கல்வி அறிவால் மேம்பட்டது எமது தமிழ்ச் சமூகம் என்று மார்தட்டிப் பெருமை கொண்டோம் அன்று. இன்று ஒரு சில பகுதி வர்க்கத்தினரே கல்விக்குரியவர்கள் என்ற நிலை தோற்றுவிக்கப்படுகின்றது. இந்த நிலையை மக்கள் சமுதாயம் விழித்தெழுந்து துடைத்தெறிய முற்பட வேண்டும்.

மாணவமணிகள், பெற்றோர்கள், மக்கள் சமூகம் நல்ல ஆசானை இனங்கண்டும் அதேபோன்று நல்ல மாணவமணிகளை நல்லாசான் இனங்கண்டும்

பாராட்டிக் கௌரவிக்க வேண்டும். இன்று பாராட்டு என்பது மிக மலிந்த ஒரு பொருளாகிவிட்டது. எமது தேவை எது என்பதை எமது சமூகம் உணர்ந்து செயற்படத் தொடங்கினால் வருங்கால சமுதாயம் சிறந்த நன்மையடையும் என்பதில் சந்தேகமில்லை.

அறம், உயர், விளக்கம், நினைவாற்றல், அகக்காட்சி, மன எழுச்சி, ஆராய்வுத் திறன் இவை யாவற்றையும் ஒரு மனிதனுக்கு பெற்றுக்கொடுப்பவர்கள் ஆசிரியர்களே. அஞ்ஞானம் என்னும் இருளை அகற்றி மெஞ்ஞானம் என்னும் கலைச்சுடரைப் பரப்பும் தொண்டர்களே நல்லாசிரியர்கள்.

ஆசிரியத் தொண்டின் பெருமை, பட்டம், பதவிகளைக் கொண்டோ, சம்பளத்தைக் கொண்டோ மதிப்பிட முடியாது. ஆசிரியரின் குணசீலங்களைக் கொண்டே மாணவர் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், உற்றார், உறவினர், பணம் படைத்தோர், வறியவர், தாழ்ந்தவர், உயர்ந்தவர் என்ற பாகுபாடற்றவர்களாக **"பாடை ஏறினும் ஏடது கைவிடேல்"** என்ற முதுமொழிக்கு இலக்கணமாகத் திகழும் ஆசிரியர்கள் நல்லாட்சி தோன்றி நிலைக்க நல்ல மாணவ மணிகளை உருவாக்க வேண்டும். அதுவே அவர்களின் தலையாய கடமையாக அமைகின்றது.

இதையே பாரதியாரும்,

**இன்னுறுங் கலைச் சோலைகள் செய்தல்**
**இனிய நீர்த்தள சுனைகள் இயற்றல்**
**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**பின்னருள்ள தருமங்கள் யாவும்**
**பெயர்விளங்கி யொளிர நிறுத்தல்**
**அன்னயாவினும் புண்ணியங் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்**
**என்று அழகுறப் பாடியுள்ளார்.**

கல்வியோடு சேர்ந்த ஒழுக்கத்தினை திருவள்ளுவர்,

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

எனக் குறிப்பிட்டுள்ளார். நாவலர் பெருமான் நூறு ஆண்டுகளுக்கு முன் கண்ட கனவை இன்று நனவாக்கி சேர். பொன்னம்பலம் இராமநாதன் வழியில் நிலைநிறுத்தி அதை அடியொற்றி அவர் போன்று கல்விக்கு வித்திட்டு எல்லோரும் அறிஞராகி கருவறை தொடக்கம் கல்லறை வரை கல்வியின் மகத்துவத்தை உணர நாம் அனைவரும் செயற்படுவோமாக.

**பெருக்கல் வாய்ப்பாடு தெரியாதான் வாழ்க்கை**
**இடுக்கண் மிகுந்து விடும்.**

❖❖❖

# எம் மாணவர்களும் ஆங்கிலமொழியும்

*திருமதி. பா. போல்கமல்ராஜ்*
*ஆங்கில ஆசிரியை*

தாய்மொழி தமிழிற்கு அடுத்ததாகக் கற்கும் நிலையில் ஆங்கிலம் கருதப்படுகிறது. இம்மொழியைக் கற்பித்தல் கற்றலில் பல்வேறு விமர்சனங்களும், சவால்களும் ஏற்பட்ட பொழுதிலும் செல்வாக்குச் செலுத்தும் மாறி மாறி வரும் அரசுகள் கூட இம்மொழியின் அவசியத்தை வலியுறுத்தாமலில்லை. பல நாடுகளின் அனுசரணையுடன் கல்விமான்களால் மிகவும சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைவான ஆங்கிலக்கல்வி எந்தளவு சிறப்படைந்துள்ளது என்பது கேள்விக்குறியே. இம்மொழியில் மாணவர்களின் ஆர்வத்தைப் பற்றி அறிய வேண்டிய கட்டாயம் எமக்குண்டு.

முதன்மைநிலை ஒன்றில் விளையாட்டு, கலந்துரையாடல், கதைகள், பாடங்கள் மூலம் ஆங்கிலச் சொற்கள் வாய்மூலம் அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஆனால் இது வகுப்பறையில் நடைபெறுவது குறைவு. தாம் கற்ற சொற்களாகக் கூட வீட்டிலோ, அன்றி சூழலிலோ பயன்படுத்துவதில்லை. பெற்றோரும் இதற்கு உடந்தையாக இல்லை. ஆசிரியர் பற்றாக்குறை கூடுதலான மாணவர் கட்டாயக் கல்வி காரணமான ஒவ்வாத வயதினர், ஆங்கிலமொழிப் பயிற்சி பெறாத ஆசிரியர் அறிவற்ற பெற்றோர் ஆகியோரும் பின்னடைவுக்குக் காரணிகளாகின்றனர்.

முதன்மைநிலை இரண்டில் தாய்மொழி எழுத, வாசிக்கத் தெரிந்த பின்னரே ஆங்கிலமொழி கட்டாயப்படுத்தப்படுகிறது. இங்கு பாடநூல்கள் அழகிய வர்ணப்படங்களுடனும், விளக்கத்துடனும் செயல்நூல்களாகவும் வழங்கப்பட்டபோதிலும் மாணவரில் ஊக்கத்தைத் தர தவறிவிடுகின்றது. அழகுநூல்கள் நோக்கம் மாறி வேறு அலங்காரங்களுக்காக படங்கள் வெட்டப்பட்டு பாழாக்கப்படுகின்றன. அத்துடன் பெற்றோரின் புலமைப்பரிசில் மோகம் மாணவன் விருப்பு வெறுப்புக்களைத் தாண்டி மேலோங்குவதால் ஆங்கிலமொழி மேலும் ஒருபடி கீழ்நோக்கித் தள்ளப்படுகிறது. பிரத்தியேக வெளியீடுகள், பத்திரிகைகள், வினாக்கள், பகலிரவு வகுப்புக்கள், தனிவகுப்பு என்பன மாணவனை நெருக்கீடு செய்ய அவனுக்கு பாடசாலை வேளை ஒரு நெகிழ்ச்சியையும், மகிழ்ச்சியையும், கொடுக்கத் தவறவில்லை. பெற்றோர்களும் ஆவணிக்குப் பின் தான் ஆங்கிலம் என்ற புதுமொழியை கையாண்டு கற்பிக்கப் பார்க்கிறார்கள். ஆனாலும் கடந்தகால வினாத்தாள்களில் ஆங்கிலமொழி வினாக்கள் சில வந்தமை விழிப்பூட்டியுள. வேதனையென்னவென்றால் ஆங்கிலமொழி கல்வி ஆறாந் தரத்தில் தொடங்கியதால் மீதி நான்கு மாதத்தில் ஆங்கிலத்தைத் திணிக்கப் பார்ப்பது அபத்தமானது.

இவ்வகையிற் பாதிப்புக்குள்ளான மாணவர்கள் இடைநிலையில் இப்பாடத்தை வெறுக்கும் நிலையிலுள்ளனர். ஆரம்ப வகுப்பு சொற்களஞ்சியத் தட்டுப்பாட்டினால் இடர்களை இங்கு எதிர்நோக்குகின்றனர். ஏனைய பாடங்களுடனான அலகுகளின் ஒத்திசைவு, மாணவர்களைத் தூண்டக்கூடிய இலகுவில் விடையளிக்கக கூடிய வினாத்தாள் என்பன இருந்தும் மாணவரின் நாட்டமின்மை பெரும் பின்னடைவையே தருகின்றது.

நயப்புமிகு ஆங்கில இலக்கணத்தை விரும்புபவர் சிலரே. கணனியின் வருகை ஆங்கிலமொழி அவசியத்தை வலியுறுத்திய பொழுதிலும் தாய்மொழி மூலக் கணனிக் கற்கை இதனைத் திசை மாற்றியுள்ளது. போட்டிகள் பல சந்தர்ப்பங்களைக் கொடுத்த பொழுதிலும் மாணவர்கள் பங்குபற்றல் மந்தமே. க.பொ.த (சா.த), (உ.த) மாணவர்கள் கூட செயற்பாட்டுக் கற்றலைவிட்டு பெரும் பணம் செலவு செய்து தொடர்பயிற்சி, மனனம், என்ற பொறிமுறைக் கற்றலில் ஈடுபடுகின்றனர். இது பல்கலைக்கழக மாணவர் மத்தியிலும் பரவுவது ஆரோக்கியமன்று.

ஆங்கிலமொழி மூல தனியார் கற்கைநெறிகள், பேச்சு வகுப்புகள், கணணிக் கற்கைகள், நவீன கற்றல் உபகரணங்களுடனான தனியார் ஆடம்பர கல்வி நிலையங்கள் என்பன ஆங்கிலமொழிக் கற்றலுக்கு ஊக்கமாக உள்ளன. வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஆங்கில ஆசிரியர் தட்டுப்பாடுகள் என்பன மேலும் இதற்கு வலுச்சேர்க்கின்றன. தற்பொழுது நடைமுறையிலுள்ள "பொப்லெப்" வெளிச்ச வீட்டுத்திட்டம் என்பன அற்புதமானவை. இவற்றைப் பயன்படுத்தி இலகுவாக்கி ஆங்கில மொழியைக் கற்போமாக.

## 2005ஆம் ஆண்டு
## புலமைப் பரிசிற் பரீட்சையிற் சித்தியடைந்தோர்



செல்வன்
விமலபாலச்சந்திரன் தனுஷன்



செல்வி
பிரதீபா வேல்ராஜா

**ஈர்மூன்று தரத்திலுள்ளோர் இருபத்தாறு எழுத்தையேனுந்**
**தெரியாத நிலைதன்னைத் திருத்து.**

♣♣♣

**மக்கென மாணவனை மனத்திலெண்ணி யொதுக்காது**
**தக்கபடி அவரவரை யணுகு.**

♣♣♣

**விஞ்ஞான பாடத்தை விருப்பமுடன் பிள்ளை கற்க**
**செய்முறைகள் செயற்படுத்திக் காட்டு.**

# யாரொடு நோவது யார்க்கெடுத்துரைப்பது
## (காலக் கண்ணாடி)

பேச்சு வார்த்தை யொன்று வந்ததினாற் - பெரும்
பாதையும் திறந்து கொண்டதானாற்
ஆச்சி யப்பு என்று சொன்னவ ரெல்லோரும்
மம்மி டாடியென்று சொல்லி வாறார்.

காளையர் காற்சட்டை யோடு வாறார் - ஒற்றைக்
காதினிற் தோட்டோடும் இங்கே வாறார்
வாயினிற் சிகரெட்டை ஊதிக்கொண்டு - தன்
தாய் வீட்டைப் பார்த்திடத் தேடி வாறார்.

வெட்டுப் பாவாடையும் விதவித ரீ - சேட்டும்
ஒட்டிய ஜீன்சும் அணிந்து வரும்
தாயையும் பெண்ணையும் தெரியவில்லை - தமிழ்ப்
பெண்ணா இவரென்றும் புரியவில்லை.

வதிவிடம் பெற்றிட வயலெற்றை (Violet) முடித்தவர்
தானாக டைவேர்சு செய்துவிட்டு
பேரழகும் பெரும் சீர் தனமும் - உள்ள
கன்னியைக் கட்டிக் கொண்டோ டுகிறார்.

டொல்பினும் பல்சரும் பெருக லாச்சு - நல்ல
பிரண்டியும் விஸ்கியும் கிடைக்கலாச்சு
வல்லு றவோடு வழிப்பறியும் - சேர்ந்து
வாகன விபத்துக்கள் பெருக லாச்சு.

வீடியோ சீடியால் வீடு தோறும் - படு
விரசமாய்ப் பாடலோடு ஆடல் பார்க்கும்
பழசுகளோடு இளசும் சேர்ந்து - பட்டப்
பகலிலும் பாழ்படும் நிலையுமாச்சு.


உதிரத்தைச் சாறாக்கி உழைத்த பணத்தினை
உறவினர்க் காயிங்கே அனுப்பி வைக்க
எதிலுங் கணக்கின்றி ஏறு மாறாயிங்கே
எண்ணம் போற் காசை விளாசுகின்றார்.

இந்தத் தமிழருக்காக வா - எம்மவர்
ஈய்ந்தனர் தம்முயிர் என நினைக்க
யாரோடு நோவது யார்க் கெடுத்துரைப்பது
என்று மனம் மிக வேகுதையோ.


*கவிமணி அன்னைதாஸன்*



மாணவ முதல்வர்கள் - 2005



வகுப்பு தலைவர்கள் - 2005



முதற்தடவையாக பங்குபற்றிய
உதைபந்தாட்டக் குழுவினர்
(12 வயது)



கோட்டமட்ட கால் இறுதியைத்
தோற்றிய உதைபந்தாட்டக் குழு – 2005
(14 வயது)



இணைந்த பாடசாலையினர்க்கு
இனிய பிரிவுபசாரம்



முன்னாள் பகுதித்தலைவருக்கு
பதக்கம் சூடல்

# சர்வதேச குறியீடுகள்

| | | |
|---|---|---|
| ♣ ஒலிவ் மரத்தின் இலை | - | சமாதானம் |
| ♣ புறா | - | சமாதானம் |
| ♣ சக்கரம் | - | வளர்ச்சி |
| ♣ தலைகீழாகக் கொடி | - | துக்கம் |
| ♣ அரைக்கம்பக் கொடி | - | இரக்கம், அனுதாபம் |
| ♣ வெள்ளைக் கொடி | - | சமாதானம் (பௌத்தர்களின் துக்கம்) |
| ♣ மஞ்சள் நிறக் கொடி | - | தொற்றுநோய் |

*சி. துர்ச்சனா*
*தரம்* - 5 A

# பொது அறிவு

| | | |
|---|---|---|
| ♠ இலங்கையின் முதல் பத்திரிகை | - | உதயதாரகை |
| ♠ பூச்சியத்தை உலகிற்கு வழங்கிய நாடு | - | இந்தியா |
| ♠ மஞ்சள் ஆறு ஓடும் நாடு | - | சீனா |
| ♠ தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் | - | கிரகாம்பெல் |
| ♠ 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் பூ | - | குறிஞ்சி |
| ♠ உலகில் நான்கு வரி தேசிய கீதத்தைக் கொண்ட நாடு | - | ஜப்பான் |
| ♠ தமிழ் அகராதியை தொகுத்தவர் | - | கதிரவேற்பிள்ளை |
| ♠ குளோனின் முறை மூலம் உருவாக்கப்பட்ட குரங்கின் பெயர் | - | டெற்றா (Tetra) |
| ♠ இலங்கையில் தாள் நாணயம் புழக்கத்திற்கு வந்த ஆண்டு | - | 1885 |
| ♠ விண்வெளிக்குச் சென்ற பெண்மணி | - | வலன்ரீனா |

*வே. பிரதீபா*
*தரம்* - 5 A

# எமது பாடசாலை அதிபர்

எமது பாடசாலை அதிபர் தி. க. ஆனந்தராசா. இவர் கருணையும், தாராள சிந்தையும் கொண்டவர். எவருக்கும் இணையற்றவர். இவர் பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது எங்களை அரவணைத்து. நல்ல அறிவுரைகளை ஊட்டி நல்வழிப்படுத்துவார். கல்வி வளர்ச்சிக்கு மட்டுமன்றி எமது ஒழுக்கம், ஒற்றுமை, இறைவழிபாடு பற்றி சிறிய சிறிய கதைகளாலும், உவமைகளாலும் அழகாக எடுத்துரைப்பார். என்னுடைய பிள்ளைகள், எங்கள் பாடசாலை என்று அவர் கூறும் அன்பான வார்த்தையும், செயலும் எம் உள்ளங்களை நெகிழ வைக்கும்.

இது மட்டுமன்றி இவர் ஓர் அம்பாளின் பக்தன் என்றும் கூறலாம். மாணவச் செல்வங்களுக்காக காலை ஆராதனையில் அம்பிகையின் அருள் வேண்டி அவர் உருகி நிற்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். சமயச் சொற்பொழிவுகள் விளக்கமாகவும் நல்ல கருத்துக்களுடனும் எடுத்தியம்பும் ஆற்றல் கொண்டவர். எமது பாடசாலையின் எந்தவொரு நிகழ்வையும் முடிந்தவரை சிறப்பாக நடத்திவைப்பார். இவர் மற்றவர்களிலும் பார்க்க வித்தியாசமான கொள்கைகள் கொண்டவராவார். இவர் எமக்கு அதிபர் மட்டுமன்றி அந்த அம்பாள் எமக்களித்த தந்தை என்றே கூற வேண்டும். இப்படியான ஒரு சிறந்த கல்விமான் எமது பாடசாலைக்கு கிடைத்தது ஒரு வரப்பிரசாதம் என்றே கருதுகின்றேன்.

***உதயநிலா – 2001***

***சி. கம்சவதனா***
***தரம் - 3B***
***இணைந்த பாடசாலை மாணவி***

# திருஞானசம்பந்தர்

- சம்பந்தக் குழந்தை மூன்று வயதில் ஞானப்பால் உண்டார்.
- இதனால் ஞானம் பெற்று தேவாரம் பாடினார்.
- இவருக்கு சிவபெருமான் பொன்னாலான தாளம் கொடுத்தார்.
- முத்துப் பல்லக்கு கொடுத்தார்.
- இவர் சைவநாயன்மார்களுள் ஒருவராகப் போற்றப்படுகிறார்.

***உதயநிலா – 2000***

***ஆ. நித்தியா***
***தரம் - 3A***

# அதிபர் சொன்ன அறிவுக்கதை

எம்மில் பலர் எதற்கெடுத்தாலும் குறை சொல்வதும் எல்லோரிலும் குறை காண்பதையும் பழக்கமாகக் கொண்டுள்ளனர். இப்பழக்கத்தை நாம் மாற்றாவிட்டால் நல்லவர்களின் நட்பு எமக்குக் கிடைக்காது. நல்லவர்களும் பகையாளிகள் ஆகிவிடுவார். நாம் எவரிலும் நல்லதையே காணவேண்டும். இதற்குப் பாரதத்தில் நல்லதோர் உதாரணத்தைக் காட்டலாம்.

கெட்டவர்களுக்கு உதாரணமாகக் கௌரவர்களையும் நல்லவர்களுக்கு உதாரணமாகப் பாண்டவர்களையும் பாரதம் காட்டி நிற்கிறது. கௌரவர்களின் தலைவனான துரியோதனனுக்கு எப்பொழுதும் கண்ணன் பாண்டவர் பக்கம் நிற்பதாக ஒரு அபிப்பிராயம். ஒரு சமயம் கண்ணனிடம் சென்று கண்ணா! நாம் எப்படித்தான் உன்மீது அன்பாக நடந்தாலும் நீ எப்பொழுதும் பாண்டவர் பக்கமே நிற்கிறாய். இது உனக்கே நல்லாயிருக்கிறதா? அப்பா என்று கேட்டும் விடுகிறான்.

அதற்கு மாயவன் அப்படியா துரியோதனா? எனக்கென்றால் அப்படித் தெரியவில்லை. சரி பார்ப்போம் என்று கூறிய பின் துரியோதனனைப் பார்த்து துரியோதனா இந்த அத்தினாபுரியில் யாராவது நல்லவர்கள் இருந்தால் அறிந்து என்னிடம் கூட்டிவா என்கிறான்.

உடனே துரியோதனன் அத்தினாபுரத்திலுள்ள மக்கள் ஒவ்வொருவரிடமும் சென்று பார்த்து பேட்டி காண்கின்றான். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரிடத்தும் ஏதோ ஒரு குறையிருப்பதாகவும் அவர்களிலும் பார்க்க தான்தான் ஏதோ ஒரு வகையில் உயர்ந்தவனாகவும் இருப்பதை உணர்கிறான். எனவே களைத்து வருகிறான். இப்பொழுது கண்ணன் கேட்கிறான். துரியோதனா நல்லவர்களைப் பிடித்து வந்தாயா என்று அதற்கு துரியோதனன் கூறுகிறான். கேசவா! இங்குள்ளவர்களைப் பார்த்தேன் இவர்கள் அனைவரும் கெட்ட குணங்கள் மலிந்தவர்கள். இவர்கள் அனைவரிலும் பார்க்க நான்தான் சிறந்தவன். வீரன் என்றான்.

அதற்கு மதுசூதனன் அப்படியா துரியோதனா! பாவம் நீ நன்கு களைத்து விட்டாயாக்கும். சற்று ஓய்வு எடு. தருமா நீ. இங்கே வா என்கிறான். தருமன் அடக்க ஒடுக்கமாக வந்து நிற்கிறான். துரியோதனன். தருமா இந்த அத்தினபுரியில் யாராவது கெட்டவர்கள் இருந்தால் அவர்களைப் பிடித்துவா என்கிறான்.

தருமன் அத்தினாபுரியிலுள்ள அனைவரையும் பார்க்கிறான். பார்த்த அனைவரிலும் நல்ல குணங்களே தெரிகிறது. அவர்களில் உள்ள கெட்ட குணங்களை அவன் பார்க்கவில்லை தன்னிலும் பார்க்க ஏதோ ஒரு வகையில் அவர்கள் நல்லவர்களாகத் தெரிகிறார்கள். களைத்து கண்ணனிடம் வந்து கோபாலா இங்குள்ள அனைவரும் மிகவும் நல்லவர்களாகவே இருக்கின்றார்கள். நான்தான் அவர்களிலும் பார்க்க சற்றுக் குறைந்தவனாகத் தென்படுகின்றேன் என்கின்றான்.

நாராயணன் நகைக்கின்றான். இப்பொழுது கண்ணன் பேசுகிறான். பார்த்தயா துரியோதனா. நீயும் தருமனும் பார்த்த மக்கள் ஒரு மக்கள் இந்த அத்தினபுரி மக்கள் தான். உன் கண்களிற்கு அவர்களிலுள்ள கெட்ட குணங்கள் தான் தெரிந்தன. அவர்களின் நல்ல குணங்களை நீ சீர்தூக்கிப் பார்க்கவும் மறந்து விடுகிறாய். ஆனால் தருமனோ அவர்களிடம் உள்ள நல்ல குணங்களைப் பார்த்து அவர்களை நல்லவர்களாகவும் கண்டு கொள்கிறான்.

இப்பொழுது தெரிகிறதா? புரிகிறதா? நான் தர்மத்தின் பக்கமே நிற்கிறேன். தருமனின் பக்கமல்ல. எனவே நாம் எல்லோரிலும் எல்லாவற்றிலும் நல்லதையே காணபோம்.

***உதயநிலா – 2000***


***கு. டினோஜன்***
***தரம் - 8 A***

# ஆனையும் தின்பான் பூனையும் தின்பான்


ஓர் நாள் அரசனைப் பார்க்க ஓர் புலவர் வந்திருந்தார். அவர் அரசனைப் பார்த்து நாடாளும் மன்னன் இவன் இவனுக்கென்ன ஆனையும் தின்பான் பூனையும் தின்பான் என்றார். இதனைக் கேட்ட மன்னன் நிறுத்தும் புலவரே நீர் என்னை வாழ்த்தினீரா இல்லைத் தூற்றினீரா என்று கோபத்துடன் கேட்டார். உடனே அருகிலிருந்து மந்திரி அரசே உங்களை இகழ்ந்த இந்தப் புலவனுக்கு மரண தண்டனை கொடுக்க ஆணையிடுங்கள் என்று ஆத்திரத்தில் கூறினார். இதனைக் கேட்ட புலவர் அரசே நான் கூறியதில் என்ன தவறு ஆனையும் தின்பான் அதாவது (ஆ + நெய்) பசுவினது நெய் பூனையும் தின்பான் அதாவது (பூ + நெய்) பூவினது தேன் என்பதனைச் சொன்னேன் என்று கூறினார். புலவரது சிலேடையை வியந்த அரசன் அவருக்குப் பெரும் பொருட்களைப் பரிசளித்தார்.

***உதயநிலா – 2001***

***யோ. அஜீபனா ஆகஷ்மி***
***தரம் - 6 A***




அம்பிகையின் ஆராதனை




மாவையின் மதிப்புரை


2004 பரிசில் [illegible]




ஆன்மீக பஜனை
நாவலர் மணிமண்டபம்



அருள்நெறித் தொண்டர்
சிவ. ஆறுமுகசாமி J.P



ஆன்மீக பஜனை



விருந்துண்ணும் விருந்தினர்

# ஊனம் ஈனமல்ல

முகுந்தன் அண்ணா எட்டாந் தரத்தில் படித்தவர். அப்பொழுதே நானும் அவரும் நல்ல நண்பர்கள். எங்களுடன் சிவாவும் படித்தவர். அவரும் எனக்கு நன்கு பிடித்தவர். ஆனால் முகுந்தன் அண்ணாவிற்குச் சிவாவைப் பிடிக்காது. காரணம் சின்ன வயதில் அவருக்கு இளம் பிள்ளைவாதம் வந்து வலதுகால் ஊனமாகிவிட்டது. இவரது இயலாமையே எனக்கு இவர் மீது ஓர் பரிவை ஏற்படுத்திவிட்டது. அவர் நடப்பதற்கு தூக்கி விட்டாற்தான் நடப்பார். நான் அவருக்கு அவ்வப்பொழுது உதவி செய்வேன்.

நான் ஒரு முறை முகுந்தன் அண்ணாவிடம் கேட்டேன் ஏன் நீங்கள் சிவாவை வெறுக்கிறீர்கள், ஒதுக்கி வைக்கிறீர்கள் என்று, அதற்கு அவர் சொன்ன பதில், இல்லை முகந்தன் எங்கடையம்மா சொன்னவா முடவர்கள் முழிவியளத்திற்கு உதவாதவர்களாம் என்று. அதனால் தான்............ நான் என்னுள் சிரித்துக் கொண்டேன். இதற்குப் பதில் சொன்னால் அவருக்கு பிடிக்குமோ என்று நினைத்து பேசாதிருந்தேன்.

காலங் கரைந்தது. இடப்பெயர்வு ஏற்பட்டது. நாம் பிரிந்துவிட்டோம். இப்போது நான் A/L படிக்கிறேன். அன்று பஸ்தரிப்பு நிலையத்தில் எதிர்பாராத விதமாக முகுந்தன் அண்ணாவைக் கண்டேன். ஐயோ! என்னால் நம்பவே முடியவில்லை. ஒருகை மணிக்கட்டிற்குக் கீழ் இல்லை. ஒருகாலும் ஜெய்ப்பூர்க் கால், ஓடோடிச் சென்று கட்டியணைத்து அழுதேன். என்னால் கதைக்க முடியவில்லை. வார்த்தைகள் வெளிவரவில்லை.

தம்பி பார் என் அம்மாவின் பழங்காலக் கொள்கையைக் கேட்டு சிவாவை ஒதுக்கிவைத்த எனக்கும் என் அம்மாவிற்கும் ஆண்டவன் சரியான தண்டனை தந்துள்ளான். மிதிவெடி என் ஒருகாலையும் கையின் ஒருபகுதியையும் கொண்டு போய்விட்டது. நல்லவேளை உயிரே போயிருக்கும். எம் போன்றவர்களின் கண்களைத் திறப்பதற்குத் தான் ஆண்டவன் உயிரோடு என்னை உலாவ விட்டிருக்கிறான்.

பஸ் வந்தது நாம் பிரிந்தோம் இதே போல் எத்தனை முகுந்தன்கள் காலிழந்து கையிழந்து கண்ணிழந்து இங்கே....................

“ஊனமுற்றோரும் உங்களைப் போன்றோரே
ஒதுக்கி வைக்காது அணைத்து நடப்பீர்”

*உதயநிலா – 2001*

*தி. சசிந்தன்*
*தரம் - 5 A*

# பரிசளிப்புவிழா தந்த பாடம்

ஒவ்வொரு பாடசாலையிலும் பரிசளிப்புவிழா அநேகமாக நடைபெறுகிறது. ஆனால் எமது பள்ளியில் எமது அதிபர் வந்த பிற்பாடு கடந்த 2001இல் நான் ஐந்தாம் வகுப்பில் படிக்கும்பொழுதே நடைபெறத் தொடங்கியது. இதனை நேரடியாக எம்மால் அனுபவிக்கவும் வாய்ப்புக் கிட்டியது. இது வெறும் விழாவன்று. அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நாங்கள் ஒன்றுசேர்ந்து எமது திறமைகளுக்காக எங்களைப் பாராட்ட எடுக்கும் விழாவாகும். அத்துடன் எமது பெற்றோர்களுக்கும் இது ஓர் திருநாளாகும். பரிசுபெற்ற பிள்ளைகளின் பெற்றோர்க்கு கிடைக்கும் ஆனந்தம் அளவிடற்கரியது. பரிசுபெறாத மாணவனும் அடுத்த முறை நானும் இப்படியோர் பரிசுபெற வேண்டும் என நினைத்து ஊன்றிப் படித்து, உற்சாகமளிக்க ஊந்துதல் அளிக்கும் விழாவாகும்.

2001 தொடக்கம் தொடர்ச்சியாக இவ்விழா நடைபெற்ற பொழுதிலும் 2004ஆம் ஆண்டு இது ஓர் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. அப்போ நான் 8ம் தரம். 2004ஆம் ஆண்டு விழாவிற்கு இனிய விருந்தினர்களாக பலரை அழைத்திருந்தோம். அதில் கௌரவ மாவை சேனாதிராஜா (பா.உ) அவர்களும் ஒருவர். ஒரு மாதத்திற்கு முன்பே இவர்களை அதிபர் சுன்னாகம் பெற்றோல் நிரப்பு நிலைய திறப்புவிழாவின் பொழுது சந்தித்து பிரதம விருந்தினராக வருவதற்குரிய சம்மதத்தையும் பெற்றிருந்தார். எமது பரிசு தினத்திற்கு இருநாளைக்கு முன்பே எமது கௌரவ விருந்தினர் அவர்கள் ஓர் மகாநாட்டிற்காக தமிழ்நாடு சென்றிருந்தார். எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தி. விழாவன்று இரவு அதிபர் செல்போன் மூலம் கௌரவ விருந்தினருடன் தொடர்புகொண்டபோதுதான் இதனை அறியக்கூடியதாக இருந்தது. ஆனாலும் அவர்கள் வாக்களித்தபடி உங்கள் விழாவில் நான் பங்குபற்றுவேன் என்றும் இரவு 10.00 மணிக்கு கொழும்பு வருவதாகவும் உறுதியளித்திருந்தார்.

விழா குறிப்பிட்ட நேரத்திற்கு ஏனைய விருந்தினர்களுடன் தொடங்கியது. எமது மனமும் அதிபர், ஆசிரியர்கள் மனமும் இவருக்காக ஏங்கிய வண்ணம் இருந்தன. சிலர் இச் சின்னப் பள்ளிக்கு இவருக்காக அவர் வருவாரா என்று முணுமுணுத்ததையும் அறிய முடிந்தது. சரியாக 10.30 மணி மேடையிலிருந்த அதிபரின் செல்போன் சத்தமிட இன்னும் 10 நிமிடத்தில் அங்கு நிற்பேன் எனக் கூறி எம் விழாவில் கலந்துகொண்டு தானும், தம் மகனும் விருந்துண்டு சென்றதை எம்மால் மறக்கமுடியுமா? அதிபரும் அவரும் இளமைக்கால அரசியல் அனுபவத்தை மேடையில் பகிர்ந்துகொண்டு எமக்குப் பல அறிவுரைகளைக் கூறினார். பல வேலைப்பழுக்களின் மத்தியிலும் பிராயணக் களைப்பையும் பொருட்படுத்தாது கொடுத்த வாக்கை காப்பாற்றிய அப் பெருந்தகையின் வாக்கு நேர்மையைப் போற்றி நாமும் பின்பற்றி வாழ்வோமாக.

***வாய்மையே வாழ்க்கை***

***வி. தர்சன்***
*தரம்* - 9 B

# கணிதத்திற்குதவியாக

1. எந்தவொரு இலக்கத்தையும் 10, 100, 1000 என்பவற்றால் பெருக்க வேண்டுமாயின் அவற்றுடன் பெருக்கும் இலக்கங்களின் பூச்சியங்களைச் சேர்க்க.
   உதாரணம் : 524 x 100 = 52400

2. எந்தவொரு இலக்கத்தையும் 25 ஆற்பெருக்க வேண்டுமாயின் அவ்விலக்கத்துடன் இரு பூச்சியங்களைச் சேர்த்து 4ஆல் பிரித்து விடுங்கள்.
   உதாரணம் : 485 x 25 - 48500 ÷ 4 = 12125

3. கணக்கு விளையாட்டு :- (நினைத்த எண்ணைச் சொல்லல்) நீ ஒரு எண்ணை நினை. அதனை இரண்டாற் பெருக்க நானும் ஒரு 18 தருகிறேன். இதில் அரைவாசியைக் கோவிலுக்குக் கொடு வந்த விடை என்ன? விடையைச் சொல்வார். அதிலிருந்து நீ கொடுத்ததின் அரைவாசியைக் கழித்து அவர் நினைத்த எண்ணைச் சொல்லலாம்.

| | | |
|---|---|---|
| உ+ம் : | அவர் சொன்ன விடை | - 34 |
| | நீர் கொடுத்த எண் | - 18 |
| | இதன் அரைவாசி | - 18 ÷ 2 = 09 |
| | அவர் நினைத்த எண் | - 34 - 9 = 25 |

இப்படியாக உங்கள் நண்பரிடம் கேட்டு விளையாடுங்கள் அறிவு பெருகும்.

4. செய்தி விளங்குகிறதா?
   I. கோவிலில் கிகிகிகிகிகிகிகிகிகிகிகிகிகி யைக் கண்டேன்
   II. தி, திக்கு திதிதிதிதிதி, திதிதிதிதிதிதி, மிமி, மிமி, ச் செத்தாள்
   III. Sugar Reading July, July coming

விடைகள்

I. கோவிலில் கனகியைக் கண்டேன் (கனக்க "கி" இருக்கு)
II. ஒருதி ஒருத்திக்கு அறுதி எழுதி இருமி இருமிச் செத்தாள்
III. சீனிவாசகம் ஆடி ஆடி வருகிறார்.

*உதயநிலா – 2000*

*யோ. டினேஷாந்*
*தரம் - 7A*

# நானெனும் அகந்தை வேண்டாம்

ஒரு ஊரிலே ஒரு கிழவி வசித்து வந்தாள். அவளிடம் ஒரு சேவல் இருந்தது. அத்தோடு ஒரு சட்டியில் உமியைப் போட்டு எந்தநேரமும் அதில் நெருப்பு மூட்டக் கூடியதாக ஓர் தீச்சட்டியுமிருந்தது. அக்கிராமத்து மக்கள் அதிகாலையில் கிழவியிடமிருந்த நெருப்புச் சட்டியிலிருந்து நெருப்பைப் பெற்று தமது காலைச் சமையலைச் செய்து வந்தனர். இதனால் எல்லோரும் இவரைப் பாட்டி பாட்டி என்று செல்லமாக அழைத்து அன்பு செலுத்தி வந்தனர். பாட்டிக்கும் அக்கிராம மக்கள் மீது நல்ல பாசம்.

ஒரு நாள் பாட்டி யோசித்தாள், "எனது தீச்சட்டியின் நெருப்பினாற்தானே இவர்கள் சமைக்கிறார்கள். எனது சேவல் கூவித்தானே இவ்வூரின் பொழுது விடிகிறது. இவர்களெல்லாம் என்னாற் தான் வாழ்கிறார்கள். எனது பெருமையை இவர்களிற்குக் காட்டவேண்டும்" சேவலையையும் தீச்சட்டியையும் கொண்டு தூரத்தே உள்ள காட்டிற்குள் போய்விட்டாள்.

அடுத்தநாள் பொழுதுவிடிந்து மக்கள் தீ எடுப்பதற்கு பாட்டியிடம் வந்தார்கள். பாட்டியைக் காணவில்லை. அவர்கள் வேறுவகையில் தீயைப் பெற்று அன்றாட வேலையைச் செய்தார்கள். பாட்டி எங்கோ போய்விட்டாள் வருவார்தானே என எண்ணினார்.

மாலை நேரம் இரு இளைஞர்கள், அக்கிராமத்திலிருந்து அடுத்த ஊருக்கு காட்டினூடு சென்றார்கள். பாட்டி சேவலையும் தீச்சட்டியையும் வைத்துக் கொண்டு பசியாலும், களைப்பாலும், தாகத்தாலும் முனகிக்கொண்டு ஒரு மரத்தின் கீழ் இருந்தார். பாட்டி, பாட்டி இந்தக் காட்டிற்குள் ஏனிப்படி இருக்கிறீர்கள் என்று இளைஞர்கள் கேட்டார்கள். தம்பி! உங்கடையூர்! பொழுது விடிஞ்சதேடா? நீங்கள் வீட்டிலை சமைச்சனீங்களேடா? என பாட்டி கேட்டாள்.

என்ன பாட்டி விசர்க்கேள்வி, விடிஞ்சது தானே. இதோ தோசை, மாமிக்கு கொண்டு போகிறோம். இந்தா இதை முதலிற் சாப்பிடு என்று தாம் கொண்டு வந்த தோசைகளையும் நீரையும் கொடுத்தனர். உண்டு தாகந் தீர்த்த கிழவியிடம் ஏன் பாட்டி அப்படிக் கேட்டீர்கள்? என்றனர். இல்லயடா தம்பி. நான் நினைச்சன் என்ர ஒரேயொரு சேவல் தானே. இது கூவினால் தான் உங்கள் பொழுது விடியுமென்று அதோடை என்ரை நெருப்பாலைதானே உங்கடை ஊரிலை சமையல் நடக்குமென்று, இப்ப தான் எனக்கு என்ரை மடத்தனம் புரியுது. போறன்ரா தம்பி வீட்டை

"என்னாலே தான் என்ற ஆர்வம் யாருக்கும் வேண்டாம் என்னாலும் என்று
பணிசெய்வோம் வாரீர்"

(வெள்ளி ஆராதனையின் போது கேட்டது)

*ந. நிசாந்தினி*
*தரம்* - 9B

# அன்னைத் தெய்வம்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று ஔவைப்பாட்டி சொல்லி இருக்கிறாள். இரண்டு முன்னறி தெய்வங்களிலும் அன்னைக்கு முதல் இடம். எம் வித்தியாசாலைகளிலும் அன்னை சரஸ்வதியாக கொலுவிருக்கிறாள். தைத்திரியோபனிடதம் மாதாவை தெய்வமாக கொள்வாயாக, பிதாவை தெய்வமாக கொள்வாயாக என்கிறது. இங்கும் மாதாவுக்கு முதல் இடம். "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானிலும் நனிசிறந்தனவே" என்றும் "தாயிற் சிறந்த கோயிலும் இல்லை" என்றும் ஏன் இன்றும் "முன்னம் முன்னம் நாங்கள் மண்ணில் காணும் தெய்வம் அம்மா" என்றும் கவிபாடி தாயின் பெருமையை போற்றிக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். சர்வலோகங்களையும் படைத்துக் காத்துக் கொண்டிருக்கின்ற மகா சக்தியை தாயாக்கி, நினைக்கும் பொழுது அம்பாள் ஆக்கி ஆராதிக்கின்றோம். அம்மா என்னும் பொழுது அன்புமயமாகவே உணர முடிகின்றது. எனவே எம்மை ஆழுகின்ற சக்தியை அம்மாவாக்கி அம்பிகையாக்கி வணங்கி அருள் பெற்று உய்வோமாக.

**"தாயின்றித் தரணியிலே சேய்தான் ஏது"**

*உதயநிலா – 2001*

*அ. துஸ்யந்தி*
*தரம் - 7B*

# பிடி அரிசி சேர்த்து மிடிகளைவோம் வாரீர்

முன்பாம் ஒவ்வொரு சைவர்களது வீட்டிலும் அடுப்புப்புகட்டின் மேல் ஓலைக் குட்டான் ஒன்று தூங்குமாம். அதில் சமைக்கும் பொழுது ஒருபிடி அரிசி போட்ட பின்பே உலையினுள் இடுவார்களாம். இதனைச் சேர்த்து "அம்மா பிச்சை" என்று வருபவர்களிற்கு அன்போடு அன்னப்பணி செய்தார்களாம். எம் ஒவ்வொருவர் வீட்டிலும் இப்படி தினந்தோறும் சேர்த்து வந்தால் எவ்வளவு பெரும்பணி செய்யலாமல்லவா? இப்படிச் சேர்த்து சந்நிதியில் அன்னதானமே செய்யலாம். ஏன் சில சந்தர்ப்பங்களில் எமது வீட்டிலும் அரிசி தட்டுப்பட்டால் பாவிக்கலாமல்லவா? இது நாவலர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாம். இதனை நீங்கள் செய்யப் பழக வேண்டும். இதனால் எமது மிடிதீரும்.

**(வெள்ளி ஆராதனையில் கேட்டது)**


*பெ. லவண்யா*
*தரம் - 5A*



மாணவ முதல்வர்
முதன்முதல் சின்னம் சூட்டடல்




இனிய பிரமுகர் றோட்டரியன்
திரு. அ. பஞ்சலிங்கம்அவர்கள்




முதன்முதல் சின்னம் சூட்டிய
மாணவத் தலைவர்கள்



வளமான பள்ளிகளை வென்று
வலய மட்டத்தை தொட்டவர்கள்
16 வயது உதைபந்தாட்ட குழு



முதல் மாணவ தலைவர்கள்



வலயமட்டத்தைத் தொட்டவர்கள்
தாச்சிப்போட்டிக் குழு - 2005

# இலக்கியமும் வாழ்க்கையும்

இயற்கையன்னை மனிதனை அறிவு வளத்திற்குரிய மூளை, உணர்ச்சி, கற்பனைத்திறன் என்பவற்றோடு படைத்திருக்கிறாள். மனிதனின் முழுமையான வாழ்விற்கு அறிவும் வேண்டும், உணர்வும் வேண்டும். உணர்வுக்கு மட்டும் இடம்கொடுத்தால் கட்டுப்பாடற்ற வாழ்வில் மனிதன் மிருகமாகிவிடுவான். அறிவுக்கு மட்டும் இடம்கொடுத்தால் வெறும் இயந்திர மயமாகிவிடுவான். எனவே அறிவியலை விஞ்ஞானமென்றும் உணர்வியற் படைப்புக்களை கலை என்றும் கொள்வர். இக்கலை மேலும் நுண்கலை, கவின்கலைகளாக, நாட்டியம், பாடல் இசை, நாடகம், ஓவியம் எனப் பரந்துபடும்.

இலக்கியம், மொழியினைக் கருவியாக்கி காலத்தால் அழியாத காப்பியங்களை, காவியங்களைப் படைத்து நிலைபெற்று வாழ்வது கற்பனை, அழகு, நளினம், அலங்காரம், பல் சுவைகளைத் தன்னகத்தே கொண்டு வாழ்வியலின் தத்துவங்களைக் காட்டிநிற்பது. மனித வரலாற்றை, விழுமியங்களைத் தாங்கி இன்றும் என்றும் வாழும் வரைவிலக்கணங்களை மனிதனுக்கு கூறிநிற்பது.

கொடுமையும் வற்புறுத்தலும் கொண்ட அரசியலால், சட்டங்களால் நிலையான சீர்திருத்தம் உண்டாகாது மாறாக, அன்பு, அருள், காருண்யம், தியாகம், தன்னலமற்ற தன்மை, என்பவற்றால் மனிதத்தை மனிதனிடம் வளர்த்து பரஸ்பர தன்னம்பிக்கையை மக்களிடம் ஊட்டுவதாலேயே சீர்திருத்தம் உண்டாகும். சட்டம் அறிவியல் தத்துவங்களை ஆக்குவோரிலும் பார்க்க இலக்கியம் படைக்கும் புலவர்கள் ஆற்றலும் செல்வாக்கும் உள்ளவர்களாக மக்களை ஆள்கிறார்கள் என ஆங்கில இலக்கிய விமர்சகர்கள் கூறுவர்.

உலக மனிதர் இயல்புகள் பெருங்கடல் போல் ஆழ, அகலமுடையது. இதனைச் சில நாளில் மடியும் சிற்றறிவாளரால் அளவிடமுடியாது. ஆனால் பொய்யில் புலவர்களின் ஆக்கங்களினால் இவர்தம் இலக்கியங்களினால் இவை ஓரளவு சாத்தியப்பட்டுள்ளன. இதன் பரிமாணமே இலக்கியமும் வாழ்க்கையுமாகும்.

*பியூரிக் ஸ்ராலின்*
*ஆண்டு 9B*

## My Teddy Bear

I have a little teddy bear. My uncle gave it to me. It is yellow in colour. It's name is Teddy. I like my Teddy.

**S. Tharaki**
**Grade - 3**

## My Self

My name is Bakeerathy Preamkumar. I am eight years old. I am in grade 4. I have three sisters and no brothers. I live in Urumpirai. I study at J/Urumpirai Santhirothaya Vidyasalai. My father is a business man and mother is a teacher. My best friend is Karthigajini. My pet is a dog. My favourite subject is English.

**P. Bakeerathy**
**Grade - 4**

## The Fruit I Like Best

- My favourite fruit is apple.
- It is red in colour.
- It is sweet to taste.
- It is very nutritional
- It comes in all the seasons.

**S. Kanistan**
**Grade - 4**

# Animal's Qualities

- Proud as a Peacock.
- Brave as a lion
- Quick as a horse
- Strong as an ox
- Graceful as a swan
- Stupid as a donkey
- Cunning as a fox
- Fierce as a tiger
- Fat as a pig
- Busy as an ant

**G. Nithya**
**Grade - 8A**

# My Pet

I have a pet dog. Its name is Lucky. It is a small beautiful dog. It is brown in colour. It has a small bushy tail. It is three months old now. I bathe it every Sunday. It sleeps in a basket. I play with it every evening. I like my pet very much.

**G. Subasthiga**
**Grade - 3**

# Health Tips

- Drink plenty of water.
- Use less salt in your cooking.
- Take regular exercise.
- Watch your weight.
- Take fresh fruits vegetables and green leaves.
- Keep cooked food covered
- Keep the environment clean.
- Don't take too much sugar.
- Don't smoke cigarettes or cigars.
- Don't take drugs or alcohol.
- Always wear clean clothes
- Wash fruit before eating.
- Trim your finger nails regularly.
- Wash your hands before eating.
- Brush your teeth after eating.

**M. Sivaruby**
**Grade - 8A**

# My English Teacher

My English teacher Mrs. B. Paul Kamalraj is my favourite. She is slim and smart. She has been teaching us English for three years.

Everyone likes Mrs. Kamalraj because she is kind and good to all. She is very clever and talented. Her lessons are very interesting. She has a sweet voice and speaks gently and softely. She spends a lot of time and energy with us.

She has formed an English Room and makes everyone read and write. She tells us how important our English Language is. A good number of students read a lot now because of Mrs. Paul Kamalraj's encouragement.

She writes neatly and beaufifully on the blackboard. She gives us exercises and corrects them. She is very active and sportive. So she plays and sings with us. She tells us interesting stories. She loves us a lot and we are very fond of her too.

**S. Thilaka**
**Grade - 9 - 2004**


# Collective Words and Phrases

01. a loaf of bread
02. a slice of cake
03. a sheet of paper
04. a tube of toothpaste
05. a gang of workmen
06. a ball of string
07. a heap of stones
08. a team of players
09. a party of tourists
10. a bar of chocolate
11. a line of clothes
12. a pile of cloth
13. a reel of cotton
14. a box of matches
15. a bowl of soup
16. a packet of tea
17. a swarm of bees
18. a plate of sandwiches
19. a group of houses
20. a flight of stairs
21. a lump of clay
22. a bar of soap
23. a packet of toffees
24. a bundle of sticks
25. a fleet of ships
26. a herd of cows
27. a string of beads
28. a bunch of flowers
29. a flock of sheep
30. a herd of cattle
31. a flock of geese
32. a bunch of keys
33. a sheaf of grain
34. a bundle of hay
35. a pair of boots
36. a gang of thieves
37. a caravan of merchants
38. a regiment of soldiers
39. a group of islands
40. a galaxy of stars
41. a board of directors
42. a choir of singers

43. a crew of sailors
44. a pile of books
45. a shoal of fish
46. a brood of chickens
47. a pack of wolves
48. a range of mountains
49. an assembly of divines
50. a bery of girls
51. a catch of fish
52. a stack of hay
53. a piece of chalk
54. a dozen of pins
55. a plate of rice
56. a lot of money
57. a bundle of firewood
58. a drop of ink
59. a crowd of people
60. a flight of stairs
61. an army of soldiers
62. a band of musicians
63. a batch of pupils
64. a bouguet of flowers
65. a budget of news
66. a bunch of grapes
67. a cluster of islands
68. a flight of birds
69. a library of books
70. a pencil of rays
71. a shower of rain
72. a stock of goods
73. a troupe of actors
74. a wreath of flowers
75. a chain of mountains

**A. Shalini**
**Grade - 9B**

## ஆற்றலுக்காகப் பெற்ற விருதுகள்



திருமதி.போல் கமல்ராஜ் (கற்.உ.ப .தே.கல்.கல்லூரி)
திருமதி.பு. மனோகரன் (கற்.உ.ப .தே.கல்.கல்லூரி)
அதிபர், இசைச் சொற்பொழிவும் ஞானச்சுடர்
ஆக்கமும் சந்நிதியான் ஆச்சிரமம்
திரு.ஞா. அன்ரன் பிறேமதாஸ் (கற்.உ.ப .தே.கல்.கல்லூரி)

# Our School

Our school is J/Urumpirai Santhirothaya vidyasalai. It was started in 1928. Our school is situated close to the junction. It's a small mixed school in Kopay Division.

There are classes from grade one to grade nine. There are fifteen teachers and four hundred students in our school. Our principal is Mr. K. Anantharajah. We have a new building with five nice classrooms. We have a nice flower garden infront our school.

There is a small beautiful open space for primary children. This small play ground has swings, slide and rope ladders. We have another playground behind the school.

We have a assembley hall where we gather every Fridays for prayers. We have a small library where we read newspapers. We have a small laboratary where we do the experements. We have a nice English Room where we try to improve our studies. We love our school very much. We are very proud of our school.

**M. Sujeetha**
**Grade - 9B**

# Our English Room

We have a nice English classroom. My English class is on the ground floor. It has many glass windows on it. So it is airy and well lighted. There is a long green chalkboard on the wall. It also has a small magnet board.

There are a lot of colourful pictures on the wall and screen. There are beautiful calenders and maps. There are many kinds of books there. There are a lot of story books in our English Room.

Our English teacher is Mrs. B. Paul Kamalraj. She takes pains to keep our English Room neat and clean. We love our English classroom. We are proud of our English Room. We all like to go to the English Room. and learn happily.

**S. Kiriya**
**Grade - 7A**

| Name of the City | What it is Famous for |
|---|---|
| 01. Kandy | Temple of the Tooth |
| 02. Colombo | World Trade Centre |
| 03. Galle | Lighthouse |
| 04. Jaffna | Palmyrah |
| 05. Nuwara Eliya | Tea |
| 06. Trincomale | Natural Harbour |
| 07. Ampalangoda | Masks |
| 08. Bibile | Oranges |
| 09. Malwana | Rambuttan |
| 10. Hikkaduwa | Corals |
| 11. Bataleeya | Cashews |
| 12. Dumbara | Mats |
| 13. Gampaha | Betal |
| 14. Hambantota | Salt |
| 15. Ratnapura | Gems |
| 16. Kalutara | Mangosteens |
| 17. Anuradhapura | Sacred Bo Tree |
| 18. Chilaw | Coconut |
| 19. Batticaloa | Singing fish |
| 20. Kekala | Rubber |

**P. Vasuki**
**Grade - 6**

உதயன் 12-09-2004

# தேசிய மட்டத்திற்குத் தெரிவு

யாழ்ப்பாணம், செப். 12

உரும்பிராய் சந்திரோதய வித்தியா சாலை மாணவன் சகாயம் துஷ்யந்தன் 11 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம்பாய்தலில் தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளார்.


தரம் ஐந்தில் கல்வி கற்கும் இவர், கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது பாட சாலையின் பிற செயற்பாடுகளிலும் மிகுந்த ஈடுபாடு காட்டிவருகிறார்.

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும் பத்தைச் சேர்ந்த இம் மாணவன் விளை யாட்டுத்துறையில் வளம் குறைந்த பாட சாலையில் கற்று வருகின்ற போதிலும், தனது அதீத திறமையினாலும் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் ஊக்குவிப்புட னும் தேசிய மட்டத்திற்குத் தெரிவாகி யுள்ளமை போற்றத்தக்கது.

தொடர்ந்தும் இந்த மாணவனுக்கு ஊக்கமும் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத்தால் எதிர்காலத்தில் மேலும் தன் திறமையை வெளிப்படுத்தும் சாத்தியம் மிகவும் உண்டு.

விளையாட்டுத்துறையில் எமது மாண வர்கள் - இளைஞர்கள் - சாதனைகள் படைத்து மிளிரவேண்டும் என்பதில் பெரு விருப்பம் கொண்டவர்கள், சகாயம் துஷ் யந்தனின் வளர்ச்சிக்கு உதவவேண்டும். எமது மத்தியில் உயரம் பாய்தலில் ஒரு சாதனையாளனை உருவாக்க மனங்கொள்வோமாக.

(10)



பாடசாலை அதிபரிடமிருந்து சான்றிதழ் பெறும் சகாயம் துஷ்யந்தன்

# 2004 ஆம் ஆண்டிற்கான பரிசுப்பட்டியல்

| | | |
|---|---|---|
| தரம் 1 | சி. சதுசனா | தமிழ் 1, கணிதம் 1, சமயம் 1, சுற்றாடல் 2 |
| | ச. யாழினி | சுற்றாடல் 1, சமயம் 1, தமிழ் 2, கணிதம் 2 |
| | ப. விதுசன் | சமயம் 1, தமிழ் 3, சுற்றாடல் 3 |
| | கோ. கஸ்மியா | கணிதம் 3 |
| தரம் 2 | பெ. சரண்யா | தமிழ் 1, சுற்றாடல் 1, சமயம் 1, கணிதம் 3 |
| | ஞா. சுபாஸ்திகா | கணிதம் 1, சுற்றாடல் 2, தமிழ் 3, சமயம் 3 |
| | ம. ஜஸ்வந்தி | தமிழ் 2, கணிதம் 2, சமயம் 2, சுற்றாடல் 3 |
| தரம் 3 | ச. விதுசனா | சுற்றாடல் 1, கணிதம் 1, சமயம் 1, தமிழ் 2, ஆங்கிலம் 2 |
| | பி. பகீரதி | தமிழ் 1, சுற்றாடல் 1, ஆங்கிலம் 1, கணிதம் 2, சமயம் 2 |
| | ந. ஜெனகரன் | சுற்றாடல் 2, சமயம் 3 |
| | ச. கனிஸ்ரன் | தமிழ் 3, சுற்றாடல் 3, கணிதம் 3, ஆங்கிலம் 3 |
| தரம் 4 | வே. பிரதீபா | சுற்றாடல் 1, கணிதம் 1, சமயம் 1, ஆங்கிலம் 1, அழகியல் 3 |
| | பெ. லவண்யா | தமிழ் 1, சுற்றாடல் 2, கணிதம் 2, ஆங்கிலம் 2 |
| | அ. லிஷா | அழகியல் 2, கணிதம் 3,சமயம் 3,ஆங்கிலம் 3 |
| | து. நிஷாந்தினி | அழகியல் 1, சமயம் 2 |
| | சி. துர்ச்சனா | தமிழ் 3 |
| | சு. சுபாசினி | தமிழ் 3 |
| | வி. தனுசன் | சுற்றாடல் 3 |
| தரம் 5 | பா. சிந்துஜன் | தமிழ் 1, சுற்றாடல் 1, கணிதம் 1, சமயம் 1, ஆங்கிலம் 1 |
| | கோ. கம்சியா | தமிழ் 2, சுற்றாடல் 2, சமயம் 2, ஆங்கிலம் 2, கணிதம் 3 |
| | ஆ. ஜெனா | தமிழ் 3, சுற்றாடல் 3 |
| | ச. துஸ்யந்தன் | கணிதம் 2 |
| | ப. வாசுகி | சமயம் 3, ஆங்கிலம் 3 |
| | ஜெ. பானுஜா | சமயம் 3 |
| தரம் 6 | சோ. கிரிஜா | தமிழ் 1, சுற்றாடல் 1, கணிதம் 1, சமயம் 1, ஆங்கிலம் 1, சுகாதாரம் 1 |
| | ம. சுஜேனி | சுற்றாடல் 2, கணிதம் 2, சமயம் 2, தமிழ் 3, ஆங்கிலம் 2, சுகாதாரம் 2 |
| | சி. விஜிதா | தமிழ் 2, கணிதம் 3, ஆங்கிலம் 3,சுகாதாரம் 3 |
| | இ. கம்சாயினி | சுற்றாடல் 3 |
| | கு. வினோதினி | சமயம் 3 |

| | | |
|---|---|---|
| தரம் 7 | ச. நிசானி | தமிழ் 1, கணிதம் 1, சுகாதாரம் 1, சமயம் 2, விஞ்ஞானம் 2, சமூகக்கல்வி 2, ஆங்கிலம் 3 |
| | வி. ராஜினி | சமயம் 1, அழகியல் 2, தமிழ் 3 |
| | சி. தியானிசா | அழகியல் 1, சமயம் 3 |
| | அ. சிவரூபி | விஞ்ஞானம் 1, சமூகக்கல்வி 1, தமிழ் 2, சுகாதாரம் 2, கணிதம் 3, அழகியல் 3 |
| | ந. ஜெயராஜன் | கணிதம் 2, ஆங்கிலம் 2 |
| | ஆ. நித்தியா | ஆங்கிலம் 1, விஞ்ஞானம் 3 |
| | பொ. மணிவண்ணன் | சுகாதாரம் 3, சமூகக்கல்வி 3 |
| தரம் 8 | ம. சுஜிதா | தமிழ் 1, சமயம் 1, அழகியல் 1, சமூகக்கல்வி 1, ஆங்கிலம் 2, சுகாதாரம் 2 |
| | அ. சாளினி | கணிதம் 1, ஆங்கிலம் 1, சுகாதாரம் 1, விஞ்ஞானம் 1,தமிழ் 2,சமயம் 3,சமூகக்கல்வி 3 |
| | வி. கனோஜன் | விஞ்ஞானம் 1, சமூகக்கல்வி 2, சமயம் 2, கணிதம் 2, தமிழ் 3, ஆங்கிலம் 3,சுகாதாரம் 3 |
| | அ. கிரிதரன் | விஞ்ஞானம் 3 |
| | க. றுமேஸ் | கணிதம் 3 |
| | சி. புவனேஸ்வரி | அழகியல் 3 |
| | ந. நிஷாந்தினி | அழகியல் 2 |
| தரம் 9 | செ. திலகா | கணிதம் 1, அழகியல் 1, விஞ்ஞானம் 1, ஆங்கிலம் 2, சமூகக்கல்வி 2 |
| | ச. கம்சிகா | சமயம் 1, ஆங்கிலம் 1,தமிழ் 2,சமூகக்கல்வி 3 |
| | அ. துஸ்யந்தினி | சுகாதாரம் 1, விஞ்ஞானம் 1, தமிழ் 3, கணிதம் 3, அழகியல் 3 |
| | ச. சாயினி | தமிழ் 1, கணிதம் 2, அழகியல் 2, ஆங்கிலம் 3 |
| | சி. நிரோஜன் | சமூகக்கல்வி 1, சமயம் 2, சுகாதாரம் 2 |
| | ம. துசிக்கா | சமயம் 2, ஆங்கிலம் 3 |
| | பெ. கார்த்திகா | சுகாதாம் 3, விஞ்ஞானம் 3 |
| | க. காந்தினி | சுகாதாரம் 3 |

## பணிகளுக்காகப் பரிசில் பெறுபவர்கள்

01. வி. தர்சன்
02. கு. இராஜ்கரன்
03. பா. அனுசன்
04. ச. சனிஸ்ரன்
05. பு. யசோதினி
06. யோ. பியூரிக்ஸ்ராலின்

## * வளங்கள் பல அல்ல. உளமே எமது பலம்.

## அண்மைக்கால சாதனைகள் - 2005 ம் ஆண்டு

1. கிளித்தட்டு
   13 வயதின் கீழ் ஆண் - கோப்பாய் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு யாழ் வலயமட்டப் போட்டியில் 4ம் இடம்.
2. உதைபந்தாட்டக்குழு
   12 வயதின் கீழ் ஆண் - முதன்முறையாக கோட்டமட்டப் போட்டிகளில் பங்குபற்றியது.
3. உதைபந்தாட்டக்குழு
   14 வயதின் கீழ் ஆண் - முதன்முறையாக கோட்டமட்டப் போட்டிகளில் பங்குபற்றி கால் இறுதிப் போட்டியில் வெற்றி வாய்ப்பை இழந்தது.
4. உதைபந்தாட்டக்குழு
   16 வயதின் கீழ் ஆண் - முதன்முறையாக கோட்டமட்டப் போட்டியில் பங்குபற்றி 2ம் இடத்தைப் பெற்று வலயமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

## 2005 ம் ஆண்டு மெய்வல்லுநர் போட்டி

வே. பிரதீபா

11 வயதின் கீழ் பெண் - நீளம் பாய்தல் - கோட்டமட்டத்தில் 2ம் இடம் வலய மட்டத்திற்கு தெரிவாகினார்.

இ. நிரோயனா

17 வயதின் கீழ் பெண் - குண்டெறிதல் - கோட்டமட்டத்தில் 2ம் இடம் வலய மட்டத்திற்கு தெரிவாகினார்.

## 2005 - புலமைப்பரிசில் சித்திபெற்றோர்

வி. தனுசன் - 131 புள்ளி

வே. பிரதீபா - 124 புள்ளி

## 2005 - தரம் 5 கட்டுரைப்போட்டி

வே. பிரதீபா - 1ம் இடம் - கோப்பாய் கோட்டம்
- வலய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்

## 2005 - தரம் 4 பேச்சுப்போட்டி

பி. பகீரதி - 2ம் இடம் - வலய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்.

## 2004 ம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டி

வே. பிரதீபா தரம் 4 - பேச்சு - 3ம் இடம் - கோப்பாய் கோட்டம்

பெ. லவண்யா தரம் 4 - கதைகூறல் - 3ம் இடம் - கோப்பாய் கோட்டம்

ந. நிசாந்தினி தனிஇசை 2ம் இடம் - கோப்பாய் கோட்டம்
- வலயமட்டத்திற்கு தெரிவாகினார்.

குழு இசை பிரிவு I - 3ம் இடம் - கோப்பாய் கோட்டம்

## 2005 ம் ஆண்டு தையல்போட்டி

ஜெ. திலக் - தரம் 6 - கோப்பாய் கோட்டம் - 1ம் இடம்

ம. சிவரூபி - தரம் 8 - கோப்பாய் கோட்டம் - 2ம் இடம்

## 2005 ம் ஆண்டு கோலப் போட்டி

ச. இந்துஜன் - தரம் 9 - கோப்பாய் கோட்டம் - 3ம் இடம்

## 1996 ஆம் ஆண்டிலிருந்து புலமைப்பரிசிற் சித்தியடைந்தோர்

S. சங்கீதா
V. றதினி
T. தபீசா
T. கேசவன்
N. தாட்சாயினி
T. சசிந்தன்
V. சுகன்யா
V. தனுஷன்
S. பவித்திரா
T. சௌமியா
Y. டினேஷாந்
T. றஜிந்தன்
S. நிருஷா
Y. அஜுபனாஅஸ்மி
S. கம்சவதனா (இணைந்த பாடசாலை)
V. பிரதீபா

## 2004 ஆம் ஆண்டு மெய்வல்லுநர் போட்டி

ச. துஸ்யந்தன்
- 11 வயதின் கீழ் ஆண் - உயரம் பாய்தல்
- கோட்டம் 2ம் இடம்
- வலயம் 1ம் இடம்
- மாவட்டம் 1ம் இடம்
- மகாணம் 3ம் இடம்

தேசியமட்டப்போட்டிக்கு தெரிவாகினார்.

# ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதனைப்போட்டிகள்

| | | | |
|---|---|---|---|
| 2002 | திருமதி. இ. சிவலிங்கம் | - | கோட்ட மட்டம் |
| | செல்வி. ப. பராசக்தி | - | கோட்ட மட்டம் |
| | திருமதி. பு. மனோகரன் | - | கோட்ட மட்டம் |
| | திருமதி. பா. போல் கமல்ராஜ் | - | கோட்டமட்டம் அதிவிசேடம்<br>வலய மட்டம் அதிவிசேடம் |
| 2003 | திருமதி. பு. மனோகரன் | - | கோட்டமட்டம் அதிவிசேடம்<br>வலயமட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். |
| 2004 | திருமதி. பு. மனோகரன் | - | கோட்ட மட்டம் |
| | திருமதி. பா. போல்கமல்ராஜ் | - | கோட்ட மட்டம்<br>வலயமட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். |

## 2005 கற்றல், கற்பித்தல் உபகரண மூலவள நிலையம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் நடாத்திய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதன உருவாக்கப்போட்டி - 2005 நடாத்திய போட்டியில் பரிசுபெற்ற ஆசிரியர்கள் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. ஞா. அன்ரன் பிறேமதாஸ் | - | முதன்மைநிலை 02<br>அதிவிசேட பரிசில் |
| 02. | திருமதி. பு. மனோகரன் | - | முதன்மைநிலை 02<br>சாதாரண பரிசில் |
| 03. | திருமதி. பா. போல்கமல்ராஜ் | - | முதன்மைநிலை 02<br>அதிவிசேட பரிசில்<br>முதன்மைநிலை 03<br>சாதாரண பரிசில் |

## உதைபந்தாட்ட அணி 16 வயதின் கீழ் ஆண்

01. ம. மதன் (அணித் தலைவர்)
02. ச. இந்துஜன் (உப அணித்தலைவர்)
03. ர. கஜீர்
04. ப. பிரசன்னா
05. ச. துஸ்யந்தன்
06. ச. சசிகாந்தன்
07. கு. ராஜ்கரன்
08. ந. பிரசாத்
09. செ. அசோக்ராஜ்
10. ர. சிலக்சன்
11. சி. நிறோஜன்
12. ந. மணிவண்ணன்
13. ம. பிரசாந்
14. ச. கபில்டன்

## கிளித்தட்டு அணி 13 வயதின் கீழ் ஆண்

01. பெ. றொபின்ராஜ் (அணித் தலைவர்)
02. கு. நிக்சன் ( உப அணித்தலைவர்)
03. சி. காந்தன்
04. ப. பிரதாப்
05. ச. லதீப்
06. இ. பகீத்
07. சி. சிவதர்சன்
08. கு. கிரிசாந்தன்
09. செ. கஜீபன்
10. சி. நிதர்சன்
11. ச. கஜீபன்

## உதைபந்தாட்டக் குழு 12 வயதின் கீழ் ஆண்

01. யோ. ஜெநாத் (அணித் தலைவர்)
02. ஜெ. துஸ்யந்தன் (உப அணித்தலைவர்)
03. சி. ஜெனிந்தன்
04. கு. மாறன்
05. தே. கௌதமன்
06. ஜெ. திலக்
07. இ. கனிஸ்ரன்
08. வி. விஸ்ணுவர்த்தன்
09. ஜெ. விதுசன்
10. சி. சுவிகரன்
11. ச. தனுசன்

## உதைபந்தாட்டக் குழு 14 வயதின் கீழ் ஆண்

01. க. றுமேஸ் (அணித் தலைவர்)
02. ஜெ. சுரேந்திரன் (உப அணித்தலைவர்)
03. ர. டனிஸ்ரன்
04. ம. நிறோஜன்
05. ஜெ. துஸ்யந்தன்
06. கு. நிக்சன்
07. பெ. றொபின்ராஜ்
08. கு. கிரிசாந்தன்
09. சி. நிதர்சன்
10. ச. லதீப்
11. ப. பிரதாப்
12. ர. கஜீத்
13. தெ. துசியந்தன்
14. இ. தெனுசன்
15. கு. வெஸ்குமார்

## மாணவரின் பின்னணி

### 98% க்கு மேற்பட்டவர்கள் வறுமைக்கோட்டின் கீழுள்ளவர்கள்

| ஆண்டு | தந்தையை இழந்தவர்கள் | தாயை இழந்தவர்கள் | இருவரையும் இழந்தவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2001 | 26 | 07 | 01 | 34 |
| 2002 | 25 | 06 | 01 | 32 |
| 2003 | 20 | 05 | 02 | 27 |
| 2004 | 27 | 03 | 03 | 33 |
| 2005 | 27 | 06 | 03 | 36 |

# உதயநிலாவின் உள்ளத்து நன்றிகள்

நூற்றாண்டு விழாவை நோக்கிச் செல்லும் இச் சிறு பாடசாலைக்கு ஓர் கனதியான பவளவிழா மலரை வெளியிட வேண்டும் எனும் உள்உந்தல் எம்மிடம் இருந்தபொழுதிலும் நிதிவளம் எம்மிடமில்லாதமையினால் இற்றைவரை அது கைகூடவில்லை. பல்வேறு வகையான நெருக்கடிகளின் மத்தியில் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் இலண்டன் கிளையினரது அளப்பரிய உதவியினாலேயே இந்தளவுக்கேனும் இம்மலர் உங்கள் கரங்களில் தவழ்கிறது. அவர்களுக்கு எம் இதயபூர்வான நன்றிகள்.

நகரப் பாடசாலைகளை நாடியோடியோரையும், வளமான பாடசாலையென தேடிச் சென்றோரையும் தவிர்த்து இப்பாடசாலையில் படிக்க வேண்டும் என நினைத்து வந்தோர் சிலரையும், எம்மிடம் வந்த ஏனையவர்களையும் தாங்கி இச் சிறு மலரை உங்களுக்குத் தந்துள்ளோம். பட்டமளிப்பு பெருவிழா நெருக்கடி நிறைவேலைப்பழு மத்தியிலும் எமது கோரிக்கைக்கு இணங்க தமது ஆக்கத்தை தந்துதவிய பேராசிரியர் அவர்களுக்கும் மற்றும் ஆசியுரைகள், வாழ்த்துரைகள் தந்த துறைசார்ந்தோருக்கும் எம்மாணவச் செல்வங்களுக்கும், இதற்கு ஒத்துழைத்து ஊக்கமளித்த சகலருக்கும் எமது இதயத்து நன்றிகள். குறை களைந்து நிறைவு காண்க என்று அடுத்த மலரிற் சந்திக்கும்.

மலர்க்குழு

- தாய் நொந்தால் தரணியில் தளைக்காது உன் வம்சம் நோய்வந்த போதவளை நோக்கு.
- காசினைத் தூசாக மதித்து உனை வளர்த்து மேன்மையுறச் செய்பவள் தாய்.
- அவரவர் கடமையை அவமாக்காது உழைத்தால் சிகரத்தை தொடலாம் நாம்.

-அன்னைதாஸன்-

## நன்றி



சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
இல. 133, பலாலி வீதி, கோண்டாவில். T. P. No : 021 222 6722